REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 6 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 82 | Wednesday 06, April, 2022 | 16பக்கங்கள் | 30/-

## நிதி அமைச்சர் அலி சப்ரியும் செயலாளர் ஆட்டிகலவும் நேற்று இராஜினாமா



புதிய அமைச்சரவையில் நிதி அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் (04) பதவியேற்ற ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கு 06

## பொதுமக்கள் நடத்தும் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் வன்முறை கும்பல்கள்

### நாட்டை சீரழிக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தாலும் குழப்பங்களை ஏற்படுத்தும் கும்பல்கள் உள்ளே புகுந்து வன்முறையாக செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் நாட்டை அழிவுக்கு உட்படுத்துவதே அவர்களின் நோக்கம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையில் கருத்து தெரிவித்த போதே முன்னாள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், நாட்டு மக்கள் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை காரணமாக வைத்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதை 06

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை

### முடிந்தால் இவ்வாரமே ஒழிக்கவும் - சஜித்



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முடிந்தால் இந்த வாரமே ஒழிக்கவேண்டும் என பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

மக்கள் அரசாங்கத்தில் மாற்றங்களை எதிர்பார்க்கின்றனர். பாராளுமன்றம் அதனை புரிந்துகொள்ளவேண்டும் என தெரிவித்துள்ள அவர், நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதற்கான யோசனையை இந்த வாரமே பாராளுமன்றத்தில் கொண்டுவரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே 06

### எல்லாவற்றுக்கும் பின்னால் அரசியல் சக்திகள்

## இன்று கோட்டாபயவை போ என்பவர்கள் நாளை உங்களையும்...!

### பாராளுமன்றத்தில் நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை



இன்று கோட்டாபயவை போ என்று சொல்கிறார்கள் நாளை நீங்களோ நானோ ஆட்சிக்கு வந்தாலும் அதே நிலை தான் ஏற்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இலங்கை வரலாற்றில் ஜனநாயக ரீதியிலான அரசியல் மாற்றமே இதுவரை ஏற்பட்டிருக்கிறது. இப்போது ஆட்சியை மாற்ற வேண்டும் என்று மக்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். 06

# அரசிடமே பெரும்பான்மை!

## இல்லையென நிரூபித்தால் பாராளுமன்றம் கலைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



**எதிரணியின் யோசனைப்படி தேர்தலுக்கு செல்லவும் அரசு தயாரென அமைச்சர் தினேஷ் சபையில் தெரிவிப்பு**

அரசாங்கத்திடமே பெரும்பான்மை உள்ளது. அவ்வாறு பெரும்பான்மை இல்லையென்பதை நிரூபித்தால் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான யோசனையை நிறைவேற்றி தேர்தலுக்கு செல்ல முடியுமென சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பான சர்ச்சையின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளதையடுத்து தற்காலிகமாகவே நான்கு அமைச்சர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார். நாட்டில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக்கு இணங்கவே ஜனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எத்தகைய சந்தர்ப்பத்திலும் ஜனநாயக ரீதியிலான பாராளுமன்ற முறையை மீறி செயற்பட முடியாது. ஜனாதிபதி அனைத்து அமைச்சர்களையும் 06

### நாட்டின் நெருக்கடி நிலை

## இன்றும் நாளையும் சபையில் விவாதம்

### கட்சித் தலைவர்கள் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் இன்றும், நாளையும் இரண்டு நாள் விவாதத்தை நடத்துவதற்கு கட்சித் 06

### நாட்டு மக்களின் குரல்களுக்கு செவிசாய்த்து

## மக்களது எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதே ஆர்ப்பாட்டங்களுக்கான தீர்வு

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு





நாட்டு மக்களின் குரல்களுக்கு செவிசாய்த்து அவர்களது எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்வதே தற்போது நாடு முழுவதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்களுக்கு சாத்தியமான ஒரே தீர்வு என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி 06

## சமையல் எரிவாயு போதுமானளவு சந்தைக்கு விநியோகம்



ஒரு இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று முன்தினம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்ந்தும் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, எரிவாயு ஏற்றிய கப்பல் ஒன்று நாட்டிற்கு வந்திருப்பதாக லாஃப் காஸ் நிறுவனம் அறிவித்திருக்கின்றது. அதனை இறக்குவதற்கு தேவையான வங்கி நடவடிக்கைகளை இலங்கை வங்கி மேற்கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாகவும் நிறுவன பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்கால அரசை ஏற்படுத்த வேண்டும்

### - விஜயதாச ராஜபக்ஷ எம்.பி



நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக இடைக்கால அரசாங்கமொன்றை ஏற்படுத்தவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான பொறுப்பை சபாநாயகர் ஏற்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக இடைக்கால அரசாங்கத்தை அமைக்காவிட்டால் முழு நாடும் எங்களை 06

## 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருக

### பாராளுமன்றில் மைத்திரிபால கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**



அரசிலமைப்பின் 20வது திருத்தத்தை இரத்துச்செய்துவிட்டு 19 வது திருத்தத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்படுவார்கள் என தெரிவித்துள்ள அவர் மோசமடைந்து வரும் 06

## TNA ஒருங்கிணைப்பு குழுவை கூட்டவும்

### உடன் ஏற்பாடு செய்ய செல்வம் MP கோரல்



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நீண்டகாலமாக இடம் பெறாமையால் உடனடியாக அதனை கூட்டுமாறு ரெலோ வலியுறுத்தியுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதன் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தற்போதைய நாட்டு 06

## மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரமின் இறுதிக்கிரியை இன்று



மறைந்த கல்வித்துறை பேராசிரியர் சோ.சந்திரசேகரமின் இறுதி கிரியைகள் இன்று நடைபெறவுள்ளன.

கொழும்பு பொரல்லை மயானத்தில் இறுதிக் கிரியைகள் இடம் பெறும் என அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

கொழும்பு ரேமன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அவரது புகழுடலுக்கு 06



### நாட்டின் நிதி நெருக்கடிக்கு தீர்வாக

## உலக வங்கி, ADB வங்கிகளிடம் கடன்களை பெறலாமே!

### பாராளுமன்றில் ரணில் MP தெரிவிப்பு

03

## அவசர கால நிலை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும்

### த.தே.கூ. சபையில் கோரிக்கை



03

## மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவே ஜீவன் பதவியிலிருந்து இராஜினாமா



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மக்களின் ஏகோபித்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே இராஜாங்க அமைச்சர் பதவியை ஜீவன் தொண்டமான் இராஜினாமா செய்தார் என மருதுபாண்டி ராமேஸ்வரன் எம்.பி. நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மக்களின் விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும் வகையிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்தும் செயற்பட்டு வந்துள்ளது. நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையில் மலையகப் பெருந்தோட்ட மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் மக்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஜீவன் தொண்டமான் தமது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். 06

## நோன்பு நேரங்கள்



ஸஹர் முடிவு: 04.37
நோன்பு துறக்கும் நேரம்: 06.20

## பிரதி சபாநாயகர் நேற்று இராஜினாமா



பாராளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்வதாக ரஞ்சித் சியம்பலபிட்டிய அறிவித்துள்ளார். அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ள ஸ்ரீலங்கா 06

### போராட்டங்களை நடத்தலாம்:

## தேவையற்ற வன்முறைகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும்

### பாதுகாப்பு செயலாளர் மக்களிடம் கோரிக்கை



**ஸாதிக் ஷிஹான்**

நாடளாவிய ரீதியில் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் தேவையற்ற வன்முறைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்களை பாதுகாக்கும் விடயங்களில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் அதேசமயம் கண்காணித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு 06

## சு.க எம்.பிக்கள் 14 பேர் தனித்து செயற்பட முடிவு

### சபையில் சு.க. தலைவர் மைத்திரிபால

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் தனித்து சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளதாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல், நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் பக்கமே சு.க உள்ளது. கடந்த 03 மாதங்களாக இந்த பிரச்சினைகளை தீர்க்க நாம் யோசனை முன்வைத்தோம். மீண்டும் 20 யோசனைகளை சமர்ப்பித்தோம். ஆனால் அவற்றுக்குப் பதில் கிடைக்கவில்லை. அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டது. இதனால் 06

### வரலாற்றில் முதன்முறையாக

## டொலரின் பெறுமதி ரூ.300ஐ தாண்டியது!



வரலாற்றில் முதன்முறையாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று (செவ்வாய்க்கிழமை) மேலும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

பல தனியார் வங்கிகளால் வெளியிடப்பட்ட சமீபத்திய நாணய மாற்று விகிதங்களின்படி, டொலர் ஒன்றின் விற்பனை விலை 310 ஆக விற்பனை செய்யப்படுகின்றது.

## அரசியல் நாகரீகம் தெரியாத ஒருவரே சாணக்கியன் MP

### முஷாரப் MP கடுமையாக சாடல்



அரசியல் நாகரீகம் என்னவென்றே தெரியாதவர்தான் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன். பாராளுமன்றத்தில் சிரேஷ்ட உறுப்பினர்களை, கட்சித் தலைவர்களை, முன்னாள் அமைச்சர்களை ஒருமையிலும் தரக்குறைவான வார்த்தைகளாலும் விளித்து உரையாற்றும் அவரைப்பார்த்து பிறர் நகைப்பது அவருக்கு தெரியாது. அத்தகைய ஒருவரிடம் நான் பண்பை எதிர்பார்க்க முடியாது. எனவே அவர் செய்கின்ற செயலுக்காக நான் கவலைப்படுவது அர்த்தமற்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார். 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

### புச்சா நகர படுகொலைகள்

## ரஷ்யா மீது மேலும் தடைகளுக்கு அமெரிக்கா, ஐரோப்பா நடவடிக்கை



உக்ரைனில் பொதுமக்கள் கொல்லப்படுவது தொடர்பில் ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பா புதிய தடைகளை விதிக்க திட்டமிட்டுள்ளது. மறுபுறம் ரஷ்யா ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து மேலும் உயிரிழப்புகள் கண்டறியப்படலாம் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

ரஷ்யப் படைகள் கடந்த வாரம் தலைநகர் கியேவின் வடக்கு நகரங்களில் இருந்து வாபஸ் பெற்ற நிலையில் உக்ரைனின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. உக்ரைன் படைகள் மீட்டுக்கொண்ட நகரங்களில் இந்த ஆறு வார போரில் பேரழிவு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் புச்சா நகர் மற்றும் பல வீதிகளிலும் சடலங்கள் சிதறிக் காணப்படுகின்றன.

புச்சாவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் நெருங்கிய தூரத்தில் இருந்து தலையில் சுடப்பட்டு கொல்லப்பட்ட உடல்கள் சர்வதேச அளவில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எதிராக போர் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மனித உரிமை கௌன்சிலில் இருந்து ரஷ்யாவை இடைநிறுத்த ஐ.நா பொதுச் சபையை அமெரிக்கா கோரும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

புச்சா படுகொலைகள் புட்டினைப் போர்க் குற்றவாளியாகக் கருதப் போதுமானவை என்றார் பைடன். ஆனால் இன்னும் ஆதாரங்கள் திரட்டப்பட வேண்டியுள்ளது என்றார் அவர்.

எனினும் பொது மக்களைக் கொன்றதான குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. இந்தக் கூற்றுக்கு எதிரான ஆதாரங்களை பாதுகாப்புச் சபையில் தாம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் ரஷ்யா கூறியுள்ளது.

மறுபுறம் உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி நேற்று ஐ.நா பாதுகாப்புச் சபையில் உரையாற்றினார். இதன்போது அவர் புச்சா நகரில் இடம்பெற்றிருக்கும் கொலைகள் தொடர்பில் விசாரணை ஒன்றுக்கு ஆதரவு திரட்டினார்.

நேற்றுக் காலை வீடியோ மூலம் உரையாற்றிய செலென்ஸ்கி, 'இது ஒரே ஒரு நகர் தான். ரஷ்யப் படைகள் கைப்பற்றிய பல உக்ரைனிய பகுதிகளில் ஒன்றாகவே இது உள்ளது. பிரோடியன்கா மற்றும் ஏனைய உக்ரைனிய நகரங்களில் உயிரிழப்புகள் மேலும் அதிகமாக இருக்கலாம் என்று தற்போது தகவல்கள் கிடைக்கின்றன' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புட்டின் மற்றும் அவரின் ஆதரவாளர்கள் புச்சா நிகழ்வுகளின் விளைவுகளை உணர்வார்கள் என்று ஜெர்மனி சான்சலர் ஒலாப் ஸ்கோல்ஸ் எச்சரித்துள்ளார். எதிர்வரும் நாட்களில் ரஷ்யாவுக்கு எதிராக மேலும் தடைகளை விதிக்க மேற்கத்திய கூட்டணி இணங்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவின் புதிய தடைகள் இந்த வாரம் அறிவிக்கப்படும் என்று பைடனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெக் சுலிவன் குறிப்பிட்டுள்ளார். ரஷ்ய இராஜதந்திரிகள் வெளியேற்றப்படுவார்கள் என்று பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி குறிப்பிட்டுள்ளன.

இதற்கு ரஷ்யா பதலளிக்கும் என்றும் மேற்கத்திய தூதரகங்களின் கதவுகள் இழுத்து மூடப்படும் என்றும் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் பாதுகாப்புச் சபையின் பிரதித் தலைவருமான டிமிட்ரி மெட்வெடேவ் குறிப்பிட்டுள்ளார்.

'இது எல்லோருக்கும் லேசானதாக இருக்கும். பின்னர் எல்லோரும் வேறு வழி இல்லாமல் துப்பாக்கி முனையில் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள வேண்டி இருக்கும்' என்று அவர் குறிப்பிட்டார்.

ரஷ்ய எரிவாயுவை தடை செய்வது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் கட்டாயம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஜெர்மனி பாதுகாப்பு அமைச்சர் கிறிஸ்டின் லம்ப்ரட்ச் தெரிவித்துள்ளார். எனினும் இது ஐரோப்பாவில் பெரும் எரிசக்தி பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதால் ஏனைய அதிகாரிகள் இது பற்றி அவதானத்துடனேயே கருத்து வெளியிடுகின்றனர்.

ஐரோப்பிய எரிவாயுவின் மூன்றில் ஒரு பகுதியை ரஷ்யாவே வழங்குகிறது. மேற்கத்திய தடைகளுக்கு எதிராக இதனை பயன்படுத்த புட்டின் முயன்று வருகிறார். எனினும் ரஷ்யா ஐரோப்பாவுக்கான குழாய்கள் வழியாக தொடர்ந்து எரிவாயுவை விடுவித்து வருகிறது. எரிவாயுவுக்கு தமது சொந்த நாணயமான ரூபிளில் கட்டணம் செலுத்த வேண்டும் என்று புட்டின் அறிவுறுத்தி இருக்கும் நிலையில் இது தொடர்பில் நிச்சயமற்ற சூழல் நீடித்து வருகிறது.

இதேவேளை உக்ரைனின் கிழக்கில் ரஷ்யாவின் தாக்குதலுக்காக சுமார் 60,000 ரஷ்ய மேலதிக துருப்பு தயார் நிலையில் இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. ரஷ்யா மரியுபோல் மற்றும் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கிவ் உட்பட கிழக்கு பக்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

### தென்கொரியாவுக்கு எதிராக

## கிம்மின் சகோதரி அணு தாக்குதல் எச்சரிக்கை



தென் கொரியா முன்கூட்டிய தாக்குதலை நடத்தினால் அந்த நாட்டின் இராணுவத்தை அழிப்பதற்கு வட கொரியா அணு ஆயுதத்தை பயன்படுத்துவோம் என்று வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன்னின் அதிகாரம் மிக்க சகோதரி எச்சரித்துள்ளார்.

அண்மையில் தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர், வட கொரியா மீது தாக்குதல் நடத்துவது பற்றிக் கலந்து பேசியதை அவர் சுட்டிக்காட்டினார்.

அது மிகப்பெரிய தவறு என்று ஆளுங்கட்சியின் மூத்த அதிகாரி கிம் கூறியதாக வட கொரியாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

தென் கொரியாவிடம் பலதரப்பட்ட ஏவுகணைகள் உள்ளதாகவும் வடகொரியாவில் உள்ள எந்த இலக்கையும் தங்களால் துல்லியமாகத் தாக்கமுடியும் என்றும் தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் சொ ஊக் கடந்த வெள்ளிக்கிழமை கூறியிருந்தார். அது குறித்து வடகொரியா கண்டனம் தெரிவித்தது.

தென் கொரியா சினமூட்டும் எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அங்குள்ள முக்கிய இலக்குகள் அழிக்கப்படும் என்று வட கொரியா எச்சரித்திருந்தது.

### சிவில் இராணுவ சட்டம் அமுல்

## இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க் கட்சி குற்றச்சாட்டு



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நாட்டில் 'சிவில் இராணுவ சட்டத்தை' அமுல்படுத்தி இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ஷஹ்பாஸ் சரீப் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், இம்ரான் கான் மற்றும் அவரது கட்சி உறுப்பினர்கள் பாகிஸ்தான் அரசியலமைப்புக்கு அப்பட்டமாக சவால் விடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

இம்ரான் கான் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை பாராளுன்ற பிரதிச் சபாநாயகர் இரத்துச் செய்ததோடு பிரதமரின் கோரிக்கையை அடுத்து அந்நாட்டு ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில் ஏப்ரல் மூன்றாம் திகதியை பாகிஸ்தான் வரலாற்றில் கறுப்பு தினமாக கூட்டு எதிர்க்கட்சியால் பிரகடனம் செய்யப்பட்டது.

பிரதமரை நீக்குவதற்கான ஜனநாயக, சட்டரீதியான மற்றும் அரசியலமைப்பின் ஒரே வழியாக நம்பிக்கையில்லா தீர்மானம் இருந்தபோதும் அரசு அதனை சேதப்படுத்தி இருப்பது கடுமையான குற்றச்செயல் இல்லையா? என்று பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி கேள்வி எழுப்பினார்.

## 13 மாணவிகளைக் கற்பழித்த ஆசிரியருக்கு மரண தண்டனை



இந்தோனேசியாவில் இஸ்லாமிய விடுதிப் பாடசாலையின் 13 மாணவிகளை கற்பழித்து குறைந்தது எட்டுப் பேரை கர்ப்பமுறச் செய்த அந்த பாடசாலையின் ஆசிரியர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹெரி விரவான் என்ற 36 வயதான அந்த ஆசிரியருக்கு கடந்த பெப்ரவரியில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், இந்த விவகாரம் தேசிய அளவில் அவதானத்தை பெற்றது.

எனினும் அந்த ஆசிரியர் மீது மரண தண்டனை மற்றும் இரசாயன ஆண்மை நீக்க சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று வழக்குத்தொடுநர்கள் மேன்முறையீடு செய்தனர்.

'வழக்குத்தொடுநர்களின் மேன்முறையீட்டை நாம் ஏற்கிறோம்' என்று மேற்கு ஜாவா மாகாண, பண்டுங் உயர் நீதிமன்றத்தின் இணையதளத்தில் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட நீதிபதியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டுக்கு விரவான் நீதிமன்றத்தில் தோன்றியிருக்கவில்லை என்று பேச்சாளர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் மரண தண்டனை நிறைவேற்றுவது பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருப்பதோடு கடைசியாக 2016 ஆம் ஆண்டிலேயே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தனது மகளை கர்ப்பமுறச் செய்திருப்பதாக விரவான் மீது மாணவி ஒருவரின் பெற்றோர் பொலிஸில் முறையிட்டதை அடுத்தே அவரது குற்றச் செயல்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

## விலைவாசிக்கு எதிராக பெருவில் ஆர்ப்பாட்டம்



விலைவாசி உயர்வு காரணமாக பெருவில் போராட்டம் வெடித்துள்ள நிலையில் ஊரடங்கை அமுல்படுத்துவதாக அந்நாட்டு ஜனாதிபதி பெட்ரோ காஸ்டில்லோ அறிவித்துள்ளார்.

பெருவில் கடந்த சில நாட்களாக எரிபொருள் மற்றும் உரங்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால் பொது மக்கள் தலைநகர் லிமாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்நிலையில், அரசுக்கெதிரான போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக பெரு ஜனாதிபதி பெட்ரோ காஸ்டில்லோ தலைநகரில் ஊரடங்கை நேற்று அறிவித்தார்.

மேலும், போராட்டங்கள் வன்முறையாக மாறியுள்ளதாகவும், இதுவரை 4 பேர் பலியாகியுள்ளதாகவும் பெரு அரசு தெரிவித்துள்ளது.



## கொவிட்–19: ஷங்காய் நகர் முழுவதும் பொது முடக்கம்

கொரோனா தொற்று சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து 25 மில்லியன் மக்கள் வசிக்கும் ஷங்காய் நகர் முழுவதும் பொது முடக்கநிலை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதுவரை நகரில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கு வெவ்வேறாகவே முடக்க நிலை அமுல்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது ஒட்டுமொத்த நகரிலும் கடும் கட்டுப்பாடு செயற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது சீனாவில் முழுமையான முடக்கநிலைக்கு முகம்கொடுத்திருக்கும் மிகப்பெரிய நகராக ஷங்காய் உள்ளது. தினசரி தொற்றுச் சம்பவம் 13,000க்கு மேல் அதிகரித்ததை அடுத்தே சீன நிர்வாக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

எனினும் சில சர்வதேச புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 90 முறை கொவிட் தடுப்பூசி போட்டவர் மீது விசாரணை



ஜெர்மனியைச் சேர்ந்த 60 வயது ஆடவர் ஒருவர், கொவிட்–19 தடுப்பூசியை 90 முறை போட்டுக் கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அவர் ஜெர்மனியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மேக்டபர்க் எனும் நகரைச் சேர்ந்தவர்.

தடுப்பூசிக்கு எதிரானவர்கள் தடுப்பூசிச் சான்றிதழைப் பெற, இந்த ஆடவர் உதவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அவர்கள் சார்பாக தடுப்பூசியைப் போட்டுக்கொண்டு சான்றிதழ்களைப் பெற்று, ஆடவர் அவற்றை விற்றிருக்கிறார்.

இந்த நடவடிக்கையைப் பல மாதங்களுக்குப் பின்னரே பொலிஸ் அதிகாரிகள் கண்டுபிடித்ததாக ஜெர்மனியச் செய்தி நிறுவனமான டி.பீ.ஏ குறிப்பிட்டுள்ளது. ஆடவர் தொடர்ந்து 2 நாட்கள் தடுப்பூசி போடச் சென்றபோது பிடிபட்டார்.

அவரிடமிருந்து பல போலிச் சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டன.

அவர் 90 முறையும் பல்வேறு தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டுள்ளார். அவை ஆடவரை எந்த அளவு பாதித்திருக்கும் என்பது இன்னமும் தெரியவில்லை.

ஐரோப்பாவில் தடுப்பூசிக்கு எதிரான பலர் உணவகங்கள், திரையரங்குகள், நீச்சல் குளங்கள் ஆகியவற்றுக்குச் செல்ல இத்தகைய போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது.

## டார்வினின் குறிப்புப் புத்தகங்கள் 22 ஆண்டுகளின் பின் கிடைத்தன



களவாடப்பட்ட சார்ல்ஸ் டார்வின் எழுதிய இரு குறிப்புப் புத்தகங்கள் 22 ஆண்டுகளுக்குப் பின் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு மர்மமான முறையில் மீண்டும் கிடைக்கப்பெற்றுள்ளன.

டார்வினின் 'உயிர்மரம்' வரைபடத்தை உள்ளடக்கிய தோலால் கட்டப்பட்ட இந்த சிறிய புத்தகங்கள் பல மில்லியன் டொலர்கள் பெறுமதி கொண்டதாகும்.

'நான் மகிழ்ச்சியில் உள்ளேன்' என்று பல்கலைக்கழகத்தின் நூலகர் கலாநிதி ஜெசிகா கார்ட்னர் தெரிவித்தார். 'அவை பாதுகாப்பானதாகவும், நல்ல நிலையிலும் உள்ளன' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கையெழுத்துப் பிரதிகளை புகைப்படம் எடுப்பதற்கு நூலகத்தின் சிறப்பு சேகரிப்புகள் அறையில் இருந்து அகற்றுவதற்கு அறிவுறுத்தப்பட்ட பின்னர் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதமே கடைசியாக இவைகளை காண முடிந்துள்ளது.

கலபகோஸ் தீவுகளில் இருந்து டார்வின் திரும்பிய பின்னரான இந்த குறிப்புப் புத்தகம் 1830களின் பிற்பகுதியைச் சேர்ந்ததாகும். இதில் ஒரு பக்கத்தில் அவர் வரைந்துள்ள மரத்தின் படம், அவரின் பரிணாம கோட்பாட்டுக்கு உதவியுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 6 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
06 முதல் 11 வரை
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் பங்குனி 23
ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பஞ்சமி



நாட்டின் நிதி நெருக்கடிக்கு தீர்வாக

# உலக வங்கி ADB வங்கிகளிடம் கடன்களை பெறலாமே

## பாராளுமன்றில் ரணில் MP தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணும் வகையில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் உதவிகளை பெற்றுக் கொள்ள முடியுமென முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. நான் சம்பந்தப்பட்ட நிதியத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். அவர் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராக உள்ளதாகவும் என்னிடம் கூறினாரென்றும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பான சர்ச்சையில் கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நாட்டின் நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்குத் தயாராகி வருகின்றது. இந்தநிலையில் நிதியமைச்சர் நிறைவேற்று சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி எமது நிதி நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி 06

# அவசர கால நிலை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும்

## த.தே.கூ. சபையில் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அவசரகால நிலைமை பிரகடனம் தொடர்பில் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தி பாராளுமன்றத்தின் அனுமதியை பெற வேண்டும். ஆளும் தரப்பில் சு.க இதனை எதிர்ப்பதாக அறிவித்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும். அவசர கால நிலைமை பிரகடனத்துக்கு சு.க எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை பாராளுமன்றம் அங்கீகரிக்கிறதா,இல்லையா என்பதை தீர்மானிக்க இடமளிக்க வேண்டும். இன்றேல் அது துஷ்பிரயோகம் செய்ததாக ஆகும். அரசியலமைப்பின் பிரகாரம் அவசரகால நிலைமை பிரகடனத்தை வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்றார்.

ஜனாதிபதி விலக வேண்டிய அவசியமில்லை

# 69 இலட்சம் மக்களது ஆதரவு இன்றும் ஜனாதிபதிக்கே உள்ளது

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்கள், அவருக்கு ஆணையை வழங்கியுள்ளனர்.

எனவே ஜனாதிபதி பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் ஆதரவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இன்னும் இருக்கிறது. அதனை நிரூபிக்க தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் பொதுப் போராட்டங்கள் சிறு போராட்டங்களே எனத் தெரிவித்த அமைச்சர், மக்களுக்கு நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வன்முறை, குழப்பங்களை விளைவிப்போர் கைதாவர்

## பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு



ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது வன்முறை மற்றும் குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்படும் நபர்கள், குழுக்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

எவருக்கும் அமைதியான முறையில் போராட்டங்களை மேற்கொள்வதற்கு உரிமை உள்ளது. 06




# மகத்துவம் நிறைந்த நோன்பு

அல்லாஹ்தஆலா தன் அருள்மறையில் 'நம்பிக்கையாளர்களே..! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்றே உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது' (2:183) என்று குறிப்பிட்டுள்ளான்.இதன் ஊடாக நோன்பானது இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது சமுதாயத்தினருக்கு முன்பு வாழ்ந்த சமூகங்களுக்கும் நோன்பு கடமையாக்கப்பட்டு இருந்துள்ளது. அச்சமூகங்களும் நோன்பு நோற்றுள்ளன.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'தாவூத் (அலை) அவர்களின் நோன்பு அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்கு உரியது. அத்தோடு அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய தொழுகை தாவூத் (அலை) அவர்களின் தொழுகையாகும். தாவூத் (அலை) அவர்கள் தினமும் அரைவாசி இரவு தூங்குவார். அதன் மூன்றிலொரு பகுதியில் நின்று வணங்கக்கூடியவராக இருந்தார். அதே போன்று ஒருநாள் விட்டு ஒருநாள் நோன்பு நோற்கக்கூடியவராக இருந்தார்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

அதேநேரம் மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னை வெற்றி கொண்ட தினத்தில் யூதர்கள் ஆசூரா நோன்பை நோற்று வந்தார்கள். அத்தோடு அவர்களுக்கு கவலையளிக்கும் பழைய நினைவுகளை நோன்பு நோற்று நினைவுபடுத்திவரும் பழக்கம் அவர்களிடம் இருந்து வந்துள்ளது. ஈஸா (அலை) அவர்கள் தமது தூதுத்துவப் பணியை ஆரம்பிக்க முன்னர் நாற்பது நாட்கள் நோன்பு நோற்றுள்ளார்கள். பண்டைய எகிப்தியரிடம் உருவ வழிபாடு காணப்பட்ட போதிலும் அவர்களும் பண்டிகைகளுடன் நோன்பு நோற்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர். இந்து மதத்தைப் பின்பற்றும் மக்களும் சில வகையான நோன்பு நோற்று வந்துள்ளார்கள் என்று அபுல் ஹஸன் அலிநத்வி (ரஹ்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அராபிய தீபகற்பத்தில் வாழ்ந்த அரபியர்கள் இஸ்லாத்திற்கு முன்பு நோன்பு நோற்று வந்துள்ளதாக அஹ்மத், அபூதாவூத் ஆகிய கிரந்தங்களில் பதிவாகியுள்ளன.இவ்வாறு நபி(ஸல்) அவர்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களும் நோன்பு நோற்றுள்ளதன் ஊடாக மனித வாழ்வுக்கு நோன்பு அவசியமான ஒன்றாக விளங்கி வந்திருக்கின்றது என்து தெளிவாகின்றது.

ஆகவே உடல், உள நலன்களுக்கும் பௌதீக, ஆன்மீக மேம்பாட்டுக்கும் பெரிதும் பங்களித்து மனிதனைப் பக்குவப்படுத்தக்கூடிய நோன்பை அதற்கேயுரிய ஒழுங்கில் அணுகி உரிய பயன்களை அடைந்து கொள்வோம்.

**மர்லின் மரிக்கார் ...**

# பேராசிரியர் சந்திரசேகரம் மறைவுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் அனுதாபம்

மானிடராய் பிறப்பதற்கு மகத்துவம் செய்திடல் வேண்டும். மகத்துவத்தில் மிகச் சிறப்பு மானிடராய் சாதித்தல். பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம் மகத்துவத்தில் மிகச் சிறப்பு எய்தியவர். கல்வியியலாளராக தமிழ்ச் சமூகத்துக்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது என கொழும்பு தமிழ்ச் சங்கம் அன்னாரின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்ச் சங்கத்தின் தலைவராக, துணைத் தலைவராக, புலமைக்குழுத் தவைராக தற்போதைய துணைக் காப்பாளராக இருந்து கல்வியியல், பண்பாடு, தமிழர் சமூக வரலாறு உள்ளிட்ட தளங்களில் தனது அறிவையும், புலமையையும் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கி அன்னார் பெரும் பங்காற்றினார்.

தேசிய கல்வி நிறுவகம், இலங்கை திறந்த பல்கலைக் கழகம் ஆகியவற்றின் வெளிநிலை விரிவுரையாளராகவும் இலங்கை பத்திரிகை நிறுவனம், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் கலைச்சொல்லாக்க உயர்நிலைக் குழு உறுப்பினர், ஜப்பானிய பட்டதாரிகள் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினர் என தடம்பதித்து பேராசிரியர் சோ. சந்திரசேகரம் பல நூல்களையும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் தமிழ் உலகுக்குத் தந்தவர். 06



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 23ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று

ஊக்கம் உடையவரே உடையவர் எனப்படுவர். ஊக்கமில்லாதவர் வேறு எதை உடையவராக இருந்தாலும் அவர் உடையவர் ஆக மாட்டார்.

## அரசியல் கட்சிகள் தற்போது கொண்டுள்ள முக்கிய பொறுப்பு

கொவிட்19 தொற்றின் விளைவாக நாட்டில் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார சவால் காரணமாக நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் எரிபொருள் பற்றாக்குறை, எரிவாயு தட்டுப்பாடு, அந்நிய செலாவணி பற்றாக்குறை என்றவாறு பற்றாக்குறைகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது. அத்தோடு பொருட்களின் விலையும் உயர்ந்து வருகின்றது.

இப்பொருளாதார நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதற்காகப் பல வேலைத்திட்டங்களை ஆரம்பம் முதல் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. என்றாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களிலும் மணிக்கணக்கில் மக்கள் வரிசையில் காத்திருப்பது உள்ளிட்ட பல நெருக்கடிகள் நீடித்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் இந்நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறும், நிவாரணம் பெற்றுத் தருமாறும் கோரி மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளனர். தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியானது தனித்து நின்று தீர்வு தேடக் கூடிய விடயமும் அல்ல என்பது பரவலாக உணரப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், இப்பொருளாதார நெருக்கடியின் தன்மை மற்றும் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் வகையில் அரசாங்கத்திலிருந்து அமைச்சர்கள் சகலரும் இராஜிநாமா செய்து சகலரும் ஒன்றுபட்டு இத்தேசிய நெருக்கடிக்கு தீர்வு தேட இடமளித்துள்ளனர். இந்தச் சூழலில்தான் இந்நெருக்கடிக்கு தீர்வு தேடவென ஒன்றிணையுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இப்பொருளாதார நெருக்கடிக்கும் மக்கள் முகம் கொடுத்துள்ள அசௌகரியங்களுக்கும் தீர்வு தேடுவதற்கு ஏற்ப ஜனாதிபதியும் அரசாங்கமும் வெளிப்படையாக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதிலும், அவற்றுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க எதிர்க்கட்சிகள் முன்வருவதாக இல்லை. இந்நிலையில்தான்

ஜனாதிபதியின் இந்த அழைப்பை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன நிராகரித்திருக்கின்றன.

அதேநேரம் பாராளுமன்றம் நேற்றுக் கூடிய போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பிவத்துரு ஹெல உருமய, இடதுசாரி ஜனநாயக முன்னணி, தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தாம் அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீன குழுவாகச் செயற்படப் போவதாக அறிவித்திருக்கின்றன. அத்தோடு ஸ்ரீ.ல.பொ.பெரமுனவின் குருநாகல் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட 10 பேர் அடங்கிய பாராளுமன்ற உறுப்பனர்களும் தாமும் சுயாதீனக் குழுவாகச் செயற்படப் போவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது நாடு முகம் கொடுக்கும் இப்பொருளாதார நெருக்கடியானது தனித்தனி குழுக்களாகப் பிரிந்து நின்று தீர்வு காணப்படக் கூடிய ஒன்றல்ல. எல்லாத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படும் போதுதான் ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மக்களின் எதிர்பார்ப்பு இந்நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இப்பிரச்சினைக்குத் தீர்வு தேட ஒன்றுபட மறுப்பதும், அரசாங்கத்தில் அங்கம் வகித்த கட்சிகள் அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்திருப்பதும் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடியை இக்கட்சிகள் புரிந்து கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு பிரிந்து செயற்படுவதன் ஊடாக இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் போவதுமில்லை.

அதேநேரம் இக்கட்சிகளதும் குழுவினதும் இச்செயற்பாடானது, மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார அசௌகரியங்கள் நீடித்து நிலைக்க வேண்டும் என விரும்புவதாகவே தெரிகிறது. தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளதும், அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படப் போவதாகக் கூறியுள்ள கட்சிகளதும் நகர்வுகளை நோக்கும் போது, நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்ற தோற்றப்பாட்டைக் கட்ட முயல்வதாகவே தெரிகிறது.

இது முற்றிலும் பிழையானதும் தவறானதுமான நடவடிக்கை என்பதுதான் அரசியல் அவதானிகளின் கருத்தாகும். மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார அசௌகரியங்களில் இருந்து அவர்களை மீட்டெடுக்க ஒன்றுபட்டு செயற்பட வெண்டுமேயொழிய, அவர்கள் முகம் கொடுக்கும் பொருளாதார அசௌகரியங்களுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என ஒதுங்குபவர்கள் பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லர்.

ஆகவே நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவென ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நிந்தவூர் மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய மகாகும்பாபிஷேக பெருவிழா இன்று

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பகுதியிலுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அருள்மிகு மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட மஹாகும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா இன்று(06.04.2022) நடைபெறுகிறது. கும்பாபிஷேக பிரதமகுருவாக ஆலய பிரதமகுருவும், கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியாரியாருமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் செயற்படுகிறார்.

கடந்த 2 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு கர்மாரம்பத்துடன் கிரியைகள் ஆரம்பமாகின. எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் திங்கள் காலை 8மணி முதல் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணி வரை நடைபெற்றது.

இன்று மஹாகும்பாபிஷேகம் காலை 9.12மணி முதல் 10.27மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறுகிறது. ஆலய குரு சிவஸ்ரீ ச.ஹோவர்த்தன சர்மா ஒழுங்கமைப்பில் சர்வசாதகராக சிவஸ்ரீ சண்முக மயூரவதனக் குருக்களும், பிரதிஷ்டா குருவாக கிரியாஜோதி சிவஸ்ரீ வே.யோகராசாக்குருக்களும் செயற்படுவர். மகேஸ்வர பூஜையை கோ.ஜனபாலச்சந்திரன் (அவுஸ்திரேலியா) வழங்கவுள்ளார். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 தினங்கள் மண்டலாபிசேக பூஜைகள் நடைபெறும்.





இலங்கையில் உள்ள ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயமான நிந்தவூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம் சுமார் 500 வருடங்கள் வரலாறு கொண்டது. சுற்றிவர வயல்வெளிகளுக்கு மத்தியில் ஆலமரம், அரசமரம், மாமரம், கமுகு, வில்வை மரம், தென்னை மரங்கள் நிறைந்த இயற்கையான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

போத்துக்கீசர் காலத்தில் அதாவது 15ஆம் நூற்றாண்டு காலத்தில் 1624 காலப் பகுதியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. பண்டிதர் வீ.சீ.கந்தையா உள்ளிட்ட பலர் எழுதிய பல நூல்களில் ஆதாரங்களைக் காணலாம்.

இவ்வாலயமானது போத்துக்கீசர் ஆட்சிக்காலத்தின் பிற்கூற்றில் புளியந்தீவிலிருந்து வந்த படைகளினால் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் திருக்கோவில் சித்திர வேலாயுதசுவாமி ஆலயம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் உள்ளிட்ட பல ஆலயங்கள் போத்துகீசரால் சேதமாக்கப்பட்டன.

இங்கு ஆலயத்தைச் சூழ பாம்புப்புற்றுகள் நிறையவுள்ளன. அதாவது இங்கு அம்மன் வழிபாட்டிற்கு மேலதிகமாக நாகவழிபாடும் நிலவுகிறது. வெள்ளி பௌர்ணமி மற்றும் விசேட தினங்களில் இங்கு கதவு திறந்து அம்மனுக்கு பொங்கல் செய்வது வழக்கம்.அந்நாட்களில் இங்கு 1000 இற்கு மேற்பட்ட பக்தர்கள் ஒன்று கூடுவது வழக்கம். பூரணையன்று அங்கு கண்டெடுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்திற்கு பக்தர்கள் பூச்சொரிந்து வழிபடுவர்.

ஆரம்பத்தில் இது ஒரு குடும்பத்திற்குரிய சொந்த ஆலயமாக இருந்தது. 1985 களில் இவ்வாலயம் பதியப்பட்டிருந்தது. தம்பிமுத்து என்பவரின் சொந்தப் பராமரிப்பிலே இயங்கி வந்தது. பிற்பட்ட 1990களில் தம்பிமுத்து என்பாரின் புதல்வரான விநாயகமூர்த்தி தொடர்ந்து தன்னந்தனியனாக அவ்வாலயத்தை பராமரித்து வந்தார்.

1996 களிலிருந்து இவ்வாலயம் காரைதீவை மையமாகக் கொண்டு பல கிராமங்களின் பிரமுகர்களைக் கொண்ட நிருவாகசபையினரால் பொதுக்கோயிலாக நிருவகிக்கப்பட்டு வந்தது. 1999இல் வினாயகமூர்த்தி காலமானார். அதன் பின்னர் தம்பிலுவிலைச் சேர்ந்த அதிபர் வ.ஜெயந்தன் என்பவரைத் தலைவராகக் கொண்டு பரிபாலனசபையொன்று இயங்கி வந்தது. இவரது காலத்தில் அதாவது 2012களில் தற்போதுள்ள புதிய ஆலயம் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 2013 இல் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நடும் விழா இடம்பெற்றது.

சிவஸ்ரீ நீதிநாதக்குருக்கள் முதலாவது அடிக்கல்லை நட்டு ஆரம்பித்து வைத்தார். இடைக்காலத்தில் பாண்டிருப்பைச் சேர்ந்த வினோஜன் என்பவர் தலைவராக இயங்கினார்.

அதன் பின்பு காரைதீவைச் சேர்ந்த கோ.கமலநாதன் தலைமையிலான நிருவாகசபையினர் தெரிவாகி ஆலய நிருமாணப் பணி முன்னெடுக்கப்பட்டது.அக்கரைப் பற்று, திருக்கோவில், ஆலயடிவேம்பு ,காரைதீவு போன்ற கிராமங்களின் பரோபகாரிகளின் பெரும்பங்களிப்பினால் புதிய ஆலயம் அமைக்கப்பட்டது.இருப்பினும் அதற்கான கும்பாபிசேகம் கடந்த 6 வருட காலமாக தடைப்பட்டு வந்தது.

இந்நிலையில் தலைவராகவிருந்த கோ.கமலநாதன் 2021.10.21 இல் காலமானார். அதன் பின்பு 2021.10.24 இல் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவு செய்யப்பட்டார். பல ஊர்களிலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பலவிதமான உதவிகள் கிடைக்கப் பெற்றன. அதனைக் கொண்டு ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

**வி.ரி.சகாதேவராஜா...**
(ஆலய அறங்காவலர் சபை ஆலோசகர்)

# பெருமை கொள்ளாத பண்பாளர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

திங்கள் காலை கொழும்பிலிருந்து அந்த துயரச் செய்தி கிடைத்தது.

"எங்கள் பேராசிரியர் சந்திரசேகரம் போய் விட்டார்" என்ற தகவலே அது. அதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்தேன். மேலும் பேச முடியாமல் மனம் கனத்தது.

எங்கள் குடும்ப நண்பர் அவர். எனது சகோதரர்கள் நாவேந்தன், துரைசிங்கம், தமிழ்மாறன் எல்லோரதும் அன்புக்குரிய நண்பர் அவர்.



அவர் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மகாஜன கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் எங்கள் மூத்த சகோதரர் நாவேந்தனின் மேடைப்பேச்சால் கவரப்பட்டதாகச் சொன்னார். பின்னர் அவரது மாமனார் நாகலிங்கம் மலையகத்திலிருந்து வெளியிட்ட 'செய்தி' பத்திரிகையில் நாவேந்தனின் படைப்புகளைத் தொடர்ந்து வாசித்ததாகவும் சொல்லியுள்ளார்.

எண்பதுகளின் முற்பகுதி முதல் அவருடன் நெருங்கிப் பழகி வந்திருக்கிறேன். அன்று அவர் கொழும்பு கல்யாணி வீதியில் வசித்த காலம். மாலை வேளை அவரைத் தேடி அவரது நண்பர் பேராசிரியர் பேட்ரன் பஸ்ரியாம்பிள்ளை மற்றும் நண்பர்கள் வந்து உரையாடி மகிழ்வர்.

அந்தச் சந்திப்புகளில் கலந்து கொண்டு அரசியல், இலக்கியம் மற்றும் நாட்டு நடப்புகள் குறித்தெல்லாம் பேசி மகிழ்ந்ததெல்லாம் ஞாபகத்தில் வருகிறது.

அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளராக மார்க்சிஸ வகுப்புகளிலும் கலந்து கொண்டதாகச் சொல்வார்.அன்று கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசனின் தோழராகவும் பழகி வந்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் அவர் கல்வித்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியவேளை எங்கள் இளைய சகோதரர் தமிழ்மாறன் சட்டபீடத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். அவ்வேளை இருவரையும் ஒன்றாகக் கண்டு பேசிக் கொள்ளலாம். கொழும்பு செல்லும் போதெல்லாம் அவரைக் கண்டு பேசிக் கொள்வதுண்டு.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராகவும் மற்றும் பல சமூக நிறுவனங்களின் ஆலோசகராவும் அவர் பணியாற்றியதுண்டு. தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் பல்வேறு விழாக்களிலும் அவர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவதுண்டு. கொழும்பில் நடைபெற்ற எனது நூல் வெளியீட்டு நிகழ்வுகள் பலவற்றிலும் தவறாது கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியுள்ளார்.

அவர் தலைமையில் நடைபெற்ற சில நிகழ்வுகளில் நான் பங்குபற்றி உரை நிகழ்த்தியுள்ளேன். 2015 ஆம் ஆண்டு நான் உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சில நாட்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்த ஒரு சில நாளில் அவர் பாரிஸ் மாநகர் வந்திருந்தார். எனது உடல்நிலை குறித்து அறிந்து அவரது உறவினருடன் என்னைப் பார்க்க வீடு வந்தார். நாள் முழுவதும் என்னுடன் உடல்நலம் குறித்துப் பேசி உற்சாகமூட்டினார். உற்ற சகோதரர் போன்று அன்புடன் அறிவுரைகள் பகன்றார். எல்லாம் நினைக்க நெஞ்சம் கனக்கிறது.

கல்விப் புலத்தில் பெரும் ஆளுமை அவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியவர். இறுதிவரை எழுதிக் கொண்டிருந்தவர். சிறந்த பிறமொழி இலக்கியப் படைப்புகளைத் தமிழில் அறிமுகப்படுத்தி வந்தார்.

ஜப்பான் பல்கலைக்கழகங்களிலும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டவர்.

லிபிய நாட்டுத் தலைவர் கேர்ணல் கடாபியின் 'பச்சைப் புரட்சி' குறித்தும் ஆய்வு செய்து பாராட்டுப் பெற்றவர். லிபியா நாட்டுக்கு அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர் எனவும் அறிந்திருந்தேன்.

மலையக மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் கரிசனை கொண்டவர். மலையகத்திற்குப் பல்கலைக்கழகம் வேண்டுமெனத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். பெருமை கொள்ளாத பண்பாளர். ஆழமான கருத்துகளை இயல்பான நகைச்சுவையுடன் அவர் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

இலங்கைத் திரைப்பட நாயகனாக விளங்கியவரும், பாரிஸ் மாநகரில் சில வருடங்கள் வாழ்ந்தவரும், தற்போது சென்னையில் வாழ்பவருமான நண்பர் நாகலிங்கம் சிவராம் அவர்களின் சகோதரிதான் பேராசிரியரின் மனைவியாவார். நண்பர் சிவராமும் காலையில் செய்தி அனுப்பியிருந்தார்.

மரணம் நிரந்தரமானதுதான். ஆனால் மக்கள் பணியில் ஈடுபட்டுள்ள ஆளுமைகளை அது காவு கொள்ளும் போது நெஞ்சம் நோகிறது.



**தம்பிராஜா இளங்கோவன்...**
பிரான்ஸ்

# பெரும் கல்விச் சமூகமொன்றை உருவாக்கிய பெருமைக்குரியவர் பேராசிரியர் சந்திரசேகரம்

இந்து சமய கலாசார அமைச்சில் 1990 களில் நான் பணியாற்றிய காலப்பகுதியில் அமரர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. கல்வியியல் சம்பந்தமான எழுத்துகளின் வாசகனாயிருந்த எனக்கு இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்களின் ஆலோசகராயிருந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களின் தொடர்பும், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் ஏற்பட்டன.

'மலையகப் பாரம்பரிய கலைகள்' என்ற மலையக நாட்டுப்புறவியல் ஆய்வு பற்றிய, இத்துறையில் முதலாவதாக வெளிவந்த எனது நூலுக்கு அணிந்துரை கேட்ட போது எந்தவித தயக்கமுமின்றி உற்சாகமூட்டி, ஆலோசனைகளை வழங்கி ஆசிர்வதித்து நூலை வெளியிடவும் வழிகாட்டினார். எனது ஊரிலும் பிற சமூகங்களைச் சேர்ந்த பல பேராசிரியர்கள் வசிக்கின்றனர். ஆனால் அவர்களில் பலர் தம்மை இனங்காட்டிக் கொள்வதில்லை. அதிர்ஷ்டவசமாக மலையக சமூகத்தில் தோன்றிய ஒருசில கல்விமான்கள், பேராசிரியர்கள் சமூகப் பிரஞ்ஞையுடன் தம் தனித்துவமான பங்களிப்பை மலையக சமூகத்தின் உயர்வுக்காக நல்கி வருகின்றனர். இவர்களில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் முதன்மையானவர்.

மலையகம் சார்ந்த பல அமைச்சுகளிலும், பல்கலைக்கழக அமைப்புகளிலும். வேறு சமூகநல அமைப்புகளிலும் பங்காற்றி அவர் ஓய்வின்றி உழைத்து வந்தார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராக பணியாற்றியதுடன், சகல செயற்பாடுகளுக்கும் தன்னாலான ஒத்துழைப்பினை தாராள மனதுடன் நல்கினார். கல்வியியல் கருத்தரங்குகளில் மட்டுமன்றி நாடெங்கிலும் நடைபெறும் இலக்கிய விழாக்கள், நூல் அறிமுக கூட்டங்கள் என்பவற்றிலும் பங்குபற்றி எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிப்பதை தமது கடமையாகக் கொண்டிருந்தார்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய இவர் எழுத்தை நேசித்தார். எழுதுவதற்கு எப்பொழுதும் சளைத்தவரல்ல அவர். இவரது ஆக்கங்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி. ஆசிரிய பெருந்தகைகளுக்கும் வழிகாட்டியாகவும், கல்வியியல் தொடர்பான கருத்துக் கருவூலங்களாகவும் திகழ்கின்றன. பல கருத்தரங்குகளில் இவரது ஆணித்தனமான கருத்துகள் மலையக சமூக உயர்வுக்கான வழிகாட்டியாகத் திகழ்கின்றன. மலையக சமூகநலனுக்காக அமைக்கப்பட்ட பல திட்டங்களில் இவரது யோசனைகள் தீர்க்கமானவையாகும்.

மலையகத்திற்கான தனியான ஒரு பல்கலைக்கழகம் என்ற இவரது கருத்துக் கருவூலம் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேறும் காலம் கனிந்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. பேராசிரியர் என்ற தற்பெருமையின்றி சகலரிடமும் இனிமையாகவும், எளிமையாகவும் மனந்திறந்து பேசும் இவரை எனது குடும்ப நண்பராகப் பெற்றமை நான் செய்த பாக்கியமாகும்.

'மலையகத்திற்கென தனியான ஒரு பல்கலைக்கழகம்' அமைய வேண்டுமென உழைத்த இவரது கனவை நனவாக்குவது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும். இதுவே நாம் அவருக்கு செலத்தும் அஞ்சலியாகும்.


கலாபூஷணம் மாத்தளை
**பெ.வடிவேலன்...**

# ஜனாதிபதி விலகுவதால் பிரச்சினை தீராது; முதலில் மக்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ







சபை நிருபர்கள்:
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ விலகுவதால் இன்றுள்ள பிரச்சினைகள் தீராது எனவும் சகலரும் இணைந்து பற்றி எரியும் தீயை அணைக்க வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

எதிரணிக்கு அமைச்சு பொறுப்புக்களை ஏற்க இன்னும் கால அவகாசம் உள்ளது.

அனைவரும் இணைந்து ஆட்சி அமைக்க எதிரணிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.பாராளுமன்றத்தை கூட்டுவதற்காக அமைச்சர்கள் சிலர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். நெருக்கடி நிலைக்காக இவர்கள் நியமிக்கப்படவில்லை. எதிரணிக்கு இணைய இன்னும் கால அவகாசம் உள்ளது.எதிரணியினரையும் அமைச்சு பதவிகளுக்கு நியமிக்கவே ஏனையவர்களை நியமிக்காமல் இருக்கிறார். நாட்டு மக்களுக்கு பிரச்சினை உள்ளது. தமது இருப்பிற்கான முடிவுகளை பாராளுமன்றத்தில் பலரும் முன்வைத்தார்கள். இந்த நிலைமைக்கான பொறுப்பில் இருந்து எவருக்கும் தப்ப முடியாது.இந்த நிலையை கட்டுப்படுத்தி அமைதிப்படுத்த வேண்டும். மக்களின் குரோதம் அதிகரிக்கும் வகையில் சில கட்சி எம்.பிகள் நடந்து கொண்டார்கள். ஜனாதிபதியும் அரசும் விலக வேண்டும் என்றால் அது ஜனநாயக முறையில் தான் நடக்க வேண்டும். கோட்டாபய ராஜபக்‌ஷ சென்றாலும் இந்தப் பிரச்சினை தீராது. உலகில் பல நாடுகளில் இவ்வாறான நிலை ஏற்பட்டது. மக்கள் அலையூடாக பிரச்சினையை தீர்க்க 88–89 காலத்தில் முயற்சி நடந்தது. 60 ஆயிரம் இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டார்கள். ஆர்ப்பாட்டம் செய்பவர்களின் யோசனை எங்கே. யார் தலைவர்? கோட்டாபய ராஜபக்‌ஷ விலகினாலும் பாராளுமன்றத்தில் இருந்தே நியமிக்க வேண்டும். வெளியில் இருந்து நியமிக்க முடியாது.

சகலரும் இணைந்து இந்த தீயை அணைக்க வேண்டும். இந்த ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் கட்சிகள் உள்ளன. பொதுமக்களும் உள்ளனர்.

**விஜேதாஸ ராஜபக்‌ஷ எம்.பி**

கட்சி பேதமின்றி நிலைமையை சீர் செய்யும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இன்றேல் நாட்டில் இரத்த ஆறு ஓடும். இந்த நெருக்கடி நிலையை தீர்க்க கட்சி பேதமின்றி செயற்படுவதோடு இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டும். அரசியலமைப்பின் 74 ஆவது பிரிவின் பிரகாரம் நாட்டின் பிரச்சினையை தீர்க்க நான் யோசனை சமர்ப்பித்துள்ளேன். 6 அல்லது ஒரு வருடத்திற்கு இடைக்கால அரசொன்றை நியமித்து பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். இது தேர்தல் நடத்துவதற்கு உகந்த காலமல்ல. தேர்தலுக்கு சென்றால் மக்கள் அரசியல்வாதிகளை அடித்துத் துரத்துவார்கள். சபாநாயகர் தலைமைத்துவத்தை ஏற்று இந்த நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டும் என்றார்.

**கட்சி குறித்து சிந்திக்காது நாடு குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும். நிமல் லங்சா எம்.பி**

முழு பாராளுமன்றமும் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாடு அராஜக நிலையை அடைத்துள்ளது.

மற்றவர்கள் மீது விரல் நீட்டி பிரச்சினையை தீர்க்க முடியாது. இந்த நிலையில் சபாநாயகருக்கு பாரிய பொறுப்பு உள்ளது. வீதியில் இறங்கியுள்ள மக்களை அமைதிப்படுத்த வேண்டும். சகல எம்.பிகளும் இணைந்து திட்டம் தயாரிக்க வேண்டும்.தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்தானது. கட்சி ,வயது பேதமின்றி மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். மக்களின் குரலுக்கு செவி மடுக்க வேண்டும். அடுத்த தேர்தல் குறித்து சிந்திக்காது எதிரணி பிரச்சினையை தீர்க்க முன்வர வேண்டும். ஆட்சிக்கு வர எதிரணிக்கு முடியுமாக இருந்தால் நிபந்தனையின்றி ஆதரவு வழங்க தயார். அனைவரும் இந்த நெருக்கடியை தீர்க்க ஒன்றுபடவேண்டும்.

**அருந்திக்க பெர்ணான்டோ எம்.பி.**

மக்களுக்காக என்ன சாதித்துள்ளோம் என மக்கள் பிரதிநிதிகளாக வெட்கப்பட வேண்டும். பாராளுமன்றம் உட்பட அனைவரையும் மக்கள் நிராகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. எனக்கு வாக்களித்த புத்தளம் மக்களுடன் கலந்துரையாடி எனது முடிவை அறிவிப்பேன்.அது வரை எனது பெயரை சுயாதீனமாக செயற்படும் பட்டியிலில் சேர்க்க வேண்டாம் என கோருகிறேன்.ஜனாதிபதியும் பிரதமரும் அரசாங்கமும் மக்களுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்தால் ஒத்துழைப்பேன். ஆனால் பிளாஸ்டர் தீர்வுகள் எடுக்க முடிந்தால் நானும் முடிவு எடுப்பேன் என்றார்.

**ரணில் விக்கிரமசிங்க எம்.பி**

எதிரணியின் ஒத்துழைப்பு தேவையானால் எதிரணியை விமர்சிக்கக் கூடாது. எனது பாராளுமன்ற வாழ்வில் என்றும் காணாத எதிர்ப்பை காண்கிறேன். ஜனாதிபதி ,அரசாங்கம் என்பவற்றுக்கு எதிராக போராட்டம் நடைபெறுகிறது. பல ஆளும் தரப்பு எம்.பிகளின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இதனை அனுமதிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் ஆளும் தரப்பு எம்.பிகளே முடிவு செய்ய வேண்டும். பெற்றோல்,டீசல் ,கேஸ்,மின்சாரம் இல்லை. அதற்கு டொலர் தேவை. நாட்டின் நிதி நிலைமை குறித்து நிதி குழு தலைவர் அநுர யாப்பா அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளருடன் பேசினேன். இலங்கைக்கு உதவத் தயார் என அவர் தெரிவித்தார்.

**அதுரலியே ரதன தேரர் எம்.பி**

அரசிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடையாது. இங்கு கோசம் போட்டால் பாராளுமன்றத்தில் இருந்து விமானத்தில் தான் செல்ல நேரிடும். நாட்டு நிலைமை பாராதூரமாக மாறும். மக்களின் குரலுக்கு செவி சாய்க்க வேண்டும்.

**கயாசான் நவநந்தன எம்.பி**

தேசிய கொள்கை அமைத்து நாட்டை கட்டியெழுப்ப கட்சி பேதமின்றி அனைவரும் இணைய வேண்டும். நாடு வீழ்ச்சி அடைய இடமளிக்க முடியாது.

**புத்திக பதிரண எம்.பி**

பிரதி சபாநாயகரும் விலகியுள்ளதால் நிலையியற் கட்டளையின் பிரகாரம் உடனடியாக புதிய பிரதி சபாநாயகரை தெரிவு செய்ய வேண்டும். அமைச்சர்கள் அனைவரும் விலகியதாக அறிவிக்கப்பட்டது. அவர்கள் தொடர்ந்து முன்வரிசையில் உள்ளனர். இராஜாங்க அமைச்சர்களுக்கு முன்வரிசை வழங்க வேண்டும்.

**சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன**

பிரதி சபாநாயகர் விலகினால் அது ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும். அவர் எனக்கு அறிவிப்பார் என்றார்.

**மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி**

நாட்டில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது. மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.கோட்டா,சஜித் இருவரையும் விலகுமாறு கோருகின்றனர்.225 எம்.பிகளும் வேண்டாம் என்கின்றனர். சில எம்.பிகள் சுயாதீனமாக இருப்பதாக அறிவித்துள்ளனர். அது அவர்களது ஜனநாயக உரிமையாகும். பாராளுமன்றத்தில் பல்வேறு நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. எனவே எதிரணி ஒரு உறுதியான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்

**வாசுதேவ நாணயக்கார எம்.பி**

தற்போதைய நிலைமையை எவ்வாறு கையாண்டு தீர்ப்பது என அனைத்து கட்சிகளையும் அழைத்து சபாநாயகர் முடிவு எடுக்க வேண்டும். பெரும்பான்மை உடன்பாட்டுடன் ஆட்சி அமைக்க இடமளிக்க வேண்டும்.இந்த பிரச்சினையில் இருந்து ஒதுங்கிச் செல்ல முடியாது. சர்வதேச நாணய நிதியம் குறித்து ரணில் பேசுகிறார்.

**சரத் பொன்சேக்கா எம்.பி**

மக்களின் பிரச்சினையை இங்குள்ள பலரும் உணரவில்லை. எம்.பிகள் வெளிநாடு செல்வது நிறுத்தப்பட வேண்டும்.மக்களின் போராட்டம் வெல்ல வேண்டும்.

**பிரசன்ன ரணதுங்க எம்.பி**

மக்களின் எதிர்ப்பை மதிக்கிறோம். அதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. ஆனால் குடிபோதையில் இரவு முழுவதும் பாட்டும் கூத்துமாக இருக்கிறார்கள். 2015 இல் மோசடி செய்தவர்களின் வீடுகள் தாக்கப்படவில்லை. இது தவறான முன்மாதிரியாகும். இந்த பிரச்சினையால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது.

**எஸ்.எம்.சந்திரசேன எம்.பி**

துமிந்த திசானாயக்க,செஹான் சேமசிங்க,சன்ன ஜெயசுமண மற்றும் எனது வீட்டின் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது. ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் நடு இரவில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.இவற்றின் பின்னணியில் அரசியல் சதி உள்ளது. மக்கள் சஜித்துக்கு வாக்களிக்க இருப்பதாக இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் லிபியா,ஈராக் போன்ற நிலைமை இங்கு ஏற்படும்.

**முஜீபுர் ரஹ்மான் எம்.பி.**

கோட்டாபயவை விலகுமாறு மக்கள் கோசம் எழுப்புகின்றனர். அதனை ஏற்று அவர் விலகத்தயாரா? கடந்த 3 மாதமாக மக்கள் பால்மா,கேஸ்,எரிபொருள் கோருகிறார்கள்.அரசாங்கம் நிவாரணம் வழங்கவில்லை.

**அநுர குமார திசாநாயக்க எம்.பி(தே.ம.ச)**

தாக்குதல்களின் பின்னணியில் எமது கட்சி இருந்தால் விசாரணை நடத்துமாறு கோருகிறோம். ஆளும் தரப்பில் ஒரு தரப்பினர் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்துள்ளனர்.ஆனால் அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலம் உள்ளது. நிலையான அதிகாரம் இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் மக்கள் நிராகரித்துள்ளனர்.

**இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர**

எரிபொருள், கேஸ் கோரி மக்கள் போராட்டம் நடத்தினார்கள். அவற்றுக்கு அரசாங்கம் இடையூறு செய்யவில்லை.டீசல் வழங்க முடியாமல் மீனவர்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளனர்.வீடுகளை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது.வன்முறைகளை தடுக்க பொலிஸ் மாஅதிபருக்கு பணிப்புரை வழங்குமாறு சபாநாயகரை கோருகிறோம்.கல் வீசி தாக்கி எம்மை அமைதியாக்க முடியாது. சில அரசியல் குழுக்கள் திட்டமிட்டு இதனை செய்கின்றன.

எம்.பிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய பாதுகாப்பு தரப்பிற்கு சபாநாயகர் கடுமையான பணிப்பு வழங்க வேண்டும். எமது பொறுமையை கோழைத்தனமாக கருதக் கூடாது. எதிரணிக்கு பெரும்பான்மை பலமிருந்தால் 113 பேரின் பலத்தை காட்டி பாராளுமன்றத்தை கலைக்க முடியும்.உங்களுக்கு பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்றால் பெரும்பான்மையை காட்டுங்கள். ஜனாதிபதிக்கு தேவையானால் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்திருக்கலாம். ஆளும் தரப்பு எம்.பிகளில் எவரும் எதிரணியில் இணையவில்லை. சஜித்திற்கு 48 எம்.பிகளின் ஆதரவு தான் உள்ளது.(பா)

## எத்தகைய நெருக்கடியிலும் மக்களின் குரலாக ஓங்கி ஒலிப்பேன் –அங்கஜன்

சாவகச்சேரி விசேட நிருபர்



எத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யாழ். மாவட்ட மக்களின் பிரதிநிதியாக எனது மக்களின் குரலாக நான் எப்போதும் செயற்படுவேனென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கையொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாராளுமன்ற தேர்தலில் மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளை ஆணையாக வழங்கிய என் மாவட்ட உறவுகளும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரங்களில் மக்களை நேரில் சந்தித்து அவர்களது நிலைப்பாடுகளை நேரில் கேட்டறிந்து கொண்டேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில், மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நான் மதிக்கின்றேன். எங்கள் உறவுகள் இன்று பசியோடு இருக்கிறார்கள், நீண்ட வரிசையில் நின்று பொறுமையிழந்து இன்று வீதிகளில் போராட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டை முற்றாக முடக்கிய கொரோனா பாதிப்பின் உடனடி எதிர்வினைகளை இப்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினூடாக நாம் எதிர்கொண்டுள்ளோம். நாட்டில் 'இல்லை' என்கிற வார்த்தைகளே இப்போது எங்கும் கேட்கிறது. இது இந்த தேசத்துக்கு மிகவும் சவாலான காலப்பகுதியாகும். இதிலிருந்து நாம் மீண்டேயாக வேண்டும்.

நாட்டின் நிகழ்கால பிரச்சினைக்குரிய தீர்வை மக்கள் கோரி நிற்கிறார்கள். அதனூடாக தமது எதிர்காலத்தை வளர்த்தெடுக்க அவர்கள் விரும்புகிறார்கள். தங்கள் குழந்தைகளோடு போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் நோக்கம் அதுவாகவே உள்ளது.

எனவே, பிரதான எதிர்க்கட்சி செயற்படுவது போன்று நாட்டை மீட்டெடுப்பதற்கான தீர்வுகளின்றி, வெறுமனே எதிர்ப்பரசியலை மாத்திரம் மேற்கொள்வதை நாம் விரும்பவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவே நாம் விரும்புகிறோம்.

## தென் கொரியாவில் இலங்கையருக்கு இரட்டிப்பு தொழில்வாய்ப்பு ஒதுக்கீடு





### இலங்கைக்கான அபிவிருத்தி ஒதுக்கீடுகளுக்கும் முன்னுரிமை
### கொரிய அமைச்சர் கூ யுன்சியோல் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் உறுதி

இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தொழில் ஒதுக்கீட்டை இரட்டிப்பாக்கியுள்ள கொரியா, இலங்கைக்கான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி ஒதுக்கீடுகளை அதிகரித்துள்ளதாக கொரியக் குடியரசின் அரச கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சர் கூ யுன்சியோல் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கொரியக் குடியரசின் அரச கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சர் கூ யுன்சியோல், (01) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை சந்தித்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திப்பைத் தொடர்ந்து நடைபெற்ற மதிய போசன விருந்தின் போது, இருதரப்பு உறவுகளின் முழுமையான வரம்பு மற்றும் கொரியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நெருங்கிய மற்றும் நட்புரீதியான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆராயப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கீழ் கடன் உதவிகள் மற்றும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகமையினூடாக உதவிகளை வழங்குவதனூடாக இதுவரை வழங்கப்பட்டுள்ள மகத்தான ஆதரவுக்காக கொரிய அரசாங்கத்துக்கு இலங்கையின் பாராட்டுக்களைத் தெரிவித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், மருந்து உற்பத்தி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கழிவுகளை அகற்றுதல், எரிசக்தி, தொழில்நுட்பம், தொழில் பயிற்சி மற்றும் கல்வி உள்ளிட்ட பல துறைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

வெளிநாட்டு வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்தும் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்ததுடன், பரஸ்பரம் நன்மை பயக்கும் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு இரு தரப்பும் இணைந்து செயற்பட ஒப்புக்கொண்டன. கொரியாவில் வேலைவாய்ப்பு அனுமதி முறையின் கீழ் சுமார் 22,000 புலம்பெயர் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். இலங்கையருக்கு இனிமையான தொழில் சூழலை வழங்கி, அவர்களது நலனில் அக்கறை செலுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பாராட்டுக்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

தென் கொரியாவில் இலங்கையருக்கு அதிக வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் கூ யுன்சியோல் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி ஒதுக்கீடுகளுக்காக கொரியாவின் முன்னுரிமை நாடுகளில் ஒன்றாக இலங்கை பட்டியலிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

கொரியக் குடியரசின் அரச கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சருடன், அரசியல் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர், அபிவிருத்தி மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்துக்கான பணிப்பாளர் நாயகம், பொதுத் தொடர்புகளுக்கான பிரதமரின் செயலாளர், இலங்கைக்கான கொரியத் தூதுவர், கொரியக் குடியரசின் பிரதமர் அலுவலகம் மற்றும் கொழும்பிலுள்ள கொரியத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## நான்கு மாதங்களின் பின் பாராளுமன்றம் வந்த பசில்



முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நான்கு மாதங்களுக்கு பின்னர் நேற்று (05) பாராளுமன்றில் பிரசன்னமாகியிருந்தார். நிதியமைச்சராக அவர் இருந்தபோது பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்காமையால் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானார். அத்தோடு, நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நுழைந்ததையடுத்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முழு அமைச்சரவையும் இராஜினாமா செய்தது. இறுதியாக அவரும் தனது பதவியிலிருந்து விலக வேண்டியிருந்தது.

அதனைத் தொடர்ந்து, பசில் நாட்டைவிட்டு வெளியேறி மீண்டும் அமெரிக்கா சென்றுள்ளதாக அண்மைய நாட்களில் வதந்திகள் பரவிய நிலையில், அவர் நேற்று பாராளுமன்றில் பிரசன்னமாகி அமைதியாக அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனைத்து கட்சிகளும் கூடி
# நாட்டில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் தலைமை ஏற்கவேண்டும்

### ஆளும் – எதிர்தரப்பு சபையில் கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

சபாநாயகர் தலைமையில் அனைத்து கட்சிகளையும் கூட்டி நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு காணவும் நாட்டை அமைதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பினர் நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது.

சபாநாயகரின் அறிவிப்பை தொடர்ந்து தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான குழப்ப நிலை ஏற்பட்டது. இதில் ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பிக்கள் பலரும் உரையாற்றினர். இதன்போதே இந்த நெருக்கடியை தீர்க்க தலைமை பொறுப்பேற்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய விமல் வீரவங்ச எம்.பி, பாராளுமன்றத் திலுள்ள அனைத்து கட்சிகளையும் அழைத்து நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக ஆராய்ந்து தீர்வு காண்பதற்கான முடிவுகளை எடுக்க சபாநாயகர் தலைமை வழங்க வேண்டும். அதனூடாக மாத்திரமே இந்த நிலைமை கட்டுப்படுத்த முடியுமென்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன எம்.பி, பாராளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளையும் சபாநாயகர் கூட்டி நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்கவும் அமைதி நிலையை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றேல் மோசமான நிலை ஏற்படும். அனைத்து தரப்பினருடனும் பேசி நிலைமையை அமைதிப்படுத்த வேண்டுமென்றார். மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி நிலையை பாராளுமன்றம் உணர்ந்து செயற்பட வேண்டுமென அநுர பிரியதர்தன யாப்பா கோரினார்.

வாசுதேவ நாணயக்கார எம்.பி குறிப்பிடுகையில், தற்போதைய நிலைமையை எவ்வாறு கையாண்டு தீர்ப்பதென அனைத்து கட்சிகளையும் அழைத்து சபாநாயகர் முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

## அரசிடமே பெரும்பான்மை!...

பதவி விலகுமாறு கோரினார். அதன்படி அனைத்து அமைச்சர்களும் பதவி விலகினர். அதனையடுத்து அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்தார். அனைத்து கட்சிகளும் இணைந்த அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகவே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார். ஜனாதிபதி ஒரு போதும் அரசியலமைப்பை மீறி செயற்பட மாட்டார். எமது அரசாங்கத்துக்கே தற்போது பெரும்பான்மை உள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லையென்றால் அதனை எவரும் நிரூபிக்கலாம். அதன்படி பாராளுமன்றத்தை கலைப்பதற்கான யோசனையை நிறைவேற்றி தேர்தலுக்கு செல்லலாம்.

அல்லது எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மை இருந்தால் அவர்கள் ஆட்சி அமைக்கவும் முடியும். ஆனால் அவை எதுவும் இன்றி தன்னிச்சையாக செயற்படக் கூடாது. மக்களின் பிரச்சனைகள், துன்பங்களை நாமும் அவர்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம். அமைதியான முறையில் நாம் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்போம்.அதற்காகவே ஜனாதிபதியினால் சர்வ கட்சி மாநாட்டிற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இந்நிலையில் மக்களின் தேவைகள் மற்றும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் நாகரீகம் தெரியாத...

நேற்றுப் பாராளுமன்றத்தில் முஷாரம் எம்பி உரையாற்றிகொண்டிருக்கும் போது 5000 ரூபா பணத்தாளை காண்பித்து சாணக்கியன் எம்பி குறுக்கீடு செய்தமை தொடர்பில் வினவியபதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலே தமிழ் மக்கள் பலரும் மிகவும் கஷ்ட நிலையில் காணப்படுகின்றனர். அவர்களுக்கு புலம்பெயர் தமிழ் மக்கள் டயஸ்போரா அமைப்புகள் மூலமாக அனுப்புகின்ற பணத்தில் ஒரு சதத்தையேனும் இவர் அவர்களுக்காக செலவழிப்பதில்லை. எனவே எனக்கு 5000 ரூபா தாளை காட்டுவதை விடுத்து டயஸ்போரா ஆட்களுடன் இந்த பணத்தை பாவப்பட்ட கஷ்டப்படுகின்ற தமிழ் மக்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்று நான் அவரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

பேஸ்புக்கிலும் தனது டுவிட்டர் பக்கத்திலும் தனக்கு தெரிந்த தமிழ் ஊடகங்களிலும் சில தமிழ் இணைய தளங்களிலும் செய்திகளையும் படங்களையும் போடுவதற்காக இவர் நடத்திவரும் நாடகங்கள், வேஷங்கள் மக்கள் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும். இவர் இன்னமும் கிணற்றுத்தவளை போலவே இருக்கிறார். எனவே இவர் மற்றவர்களை கிண்டல் செய்வதை நிறுத்திவிட்டு தன்னைப் பார்த்து மக்கள் சிரிப்பதை விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார்.

## பொதுமக்கள் நடத்தும் அமைதியான...

நாம் மதிக்கின்றோம். எனினும் நாட்டை அழிவுக்குள்ளாக்கும் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. கடந்த சில தினங்களாக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களை நோக்கும்போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு மதுபானத்தை வழங்கி வீதியில் இறக்கியுள்ளனர். அதன் மூலமே குழப்பமான நிலை தோற்றுவிக்கப்பட்டு வருகிறது. இது நாட்டுக்கான தவறான முன்னுதாரணமாகும். நாடு பெரும் நெருக்கடி நிலையில் காணப்படுகிறது. சுற்றுலாத்துறை மீண்டும் வீழ்ச்சியை நோக்கி செல்கிறது. அதனால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்து வருகிறது இதனை எவரும் உணராமல் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிறைவேற்று அதிகார...

அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகார முறைமையை ஒழித்ததற்காக பிரதமருக்கு அந்த அதிகாரத்தை வழங்கவும் முடியாது. ஒரு சமநிலையிலான அதிகார பகிர்வை இருவரும் கொண்டிருக்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த அரசாங்கத்தை தற்போது வீட்டுக்கு அனுப்புவதற்காகவே மக்கள் போராட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும், மக்களின் ஆசிர்வாதத்துடனேயே ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருமெனவும் அவர் குறிப்பிட்டார். நாங்கள் எந்த அமைச்சு பதவிகளையும் ஏற்கப்போவதில்லை. மக்களின் ஆசீர்வாதத்துடனேயே அனைத்தையும் ஏற்போம். ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சர் பதவிகளுக்காக வரவில்லை. 113 பெரும்பான்மையை பெறுவதற்காக இரகசிய உடன்படிக்கைகளில் ஈடுபடாதீர்கள் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றியமைப்போம் என அவர் தெரிவித்தார்.

## இன்று கோட்டாபயவை போ...

ஆனால் நாட்டில் நடக்கும் அனைத்து ஆர்ப்பாட்டங்களின் பின்னணியிலும் ஒவ்வொரு அரசியல் கட்சிகள் இருக்கின்றன என்பது உண்மையாகும்.

ஜனநாயகத்திற்கு விரோதமாக ஆட்சி மாற்றத்தை செய்ய முடியாது. அதை அனைவரும் மறக்கவேண்டாம். சிலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை போ என்று சொல்கிறார்கள். பிரதமரை போ என்று சொல்கிறார்கள். இப்பொழுது #gohomegota என்னும் ஹேஸ் டேக் நாடு முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. ஒன்றை மறவாதீர்கள், இன்று கோட்டாபய போ என்கிறார்கள். நாளை நீங்களோ நானோ யார் ஆட்சியமைத்தாலோ இதுதான் நடக்கும். இப்பிரச்சினை இன்றோ நாளையோ தீராது. இதனை நாங்கள் ஒன்றிணைந்தே தீர்க்க வேண்டும். இந்த பாராளுமன்றத்தில் என்னை விட அரசியல் அனுபவம் வாய்ந்த பலர் இருக்கின்றார்கள். நான் அரசியலுக்கு வந்து குறுகிய காலமே ஆகிறது. எனவே நாம் ஒன்றிணைந்து இப்பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வழிகளை தேட வேண்டும் என்றார்.

இதேவேளை, உலகத்தில் ஏனைய நாடுகளில் அரசாங்கம் ஜனநாயக ரீதியிலேயே மாறியிருக்கின்றன. வன்முறையால் அல்ல என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இன்றும் நாளையும் சபையில்...

தலைவர்கள் கூட்டத்தில் நேற்று தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. நேற்றைய தினமும் நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் சர்ச்சைகள் ஏற்பட்டன. அதன்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அது தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தனர்.

அதேவேளை நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சியினரால் சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனையடுத்து நேற்று பிற்பகல் சபாநாயகர் தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்மொன்று நடத்தப்பட்டதுடன் அந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. இன்றும், நாளையும் நாட்டின் நெருக்கடி நிலைதொடர்பில் இருநாள் விவாதத்தை நடத்துவதற்கு கட்சித் தலைவரர்கள் இணக்கம் தெரிவித்ததையடுத்து இரண்டு நாள் விவாதம் இன்று நடைபெறவுள்ளது.

## மக்களது எதிர்பார்ப்புகளை பூர்த்தி...

சாலிய பீரிஸ், மற்றும் செயலாளர் இசுறு பாலபட்டபெந்தி ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சில தனி நபர்களது சொத்துக்களை குறிவைத்து வன்முறைச் சம்பவங்களை கட்டவிழ்த்துவிடுவதையும் அவர்களது வீடுகள் உட்பட தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதையும் இலக்காக கொண்டு அண்மையில் நடத்தப்பட்ட சில போராட்டங்கள் வழிநடத்தப்படுவதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அவதானித்துள்ளது. அத்தகைய நடவடிக்கைகள் குற்றச்செயல்களாகும் என்பதுடன் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படவும் வேண்டியவர்களாவர். அத்தகைய

குற்றச்செயல்களை பாரபட்சமின்றி கண்டிப்பதுடன் அமைதியாக போராடுபவர்களது உரிமைகளை பாதுகாக்கும் அதேசமயம் இத்தகைய செயல்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளையும் எமது சங்கம் கோருகின்றது.

போராடுவதற்கும் தங்களது கருத்துக்களை அமைதியாக வெளியிடுவதற்கானதுமான மக்களது உரிமைக்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தொடர்ந்தும் குரல்கொடுக்கும்.

இவ்வுரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு எண்ணற்ற நிகழ்வுகளில் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளதற்கும் அப்பால், வெறுமனே போராட்டத்தில் பங்கேற்றதற்காக நியாமற்ற வகையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் நீதிமன்றிலும் பிரசன்னமாகியிருந்தனர்.

போராட்டங்களில் பங்கேற்பவர்கள் போராட்டம் அமைதியான முறையில் நடப்பதை உறுதிப்படுத்த அதிஉச்ச கவனத்தை கொண்டிருப்பதுடன் போராட்டத்தில் வன்முறையையோ அல்லது நாசகார வேலைகளையோ மேற்கொள்ள முயற்சிக்கும் நபர்கள் குறித்து மிக்க அவதானத்துடனும் இருக்க வேண்டும். அவசரகால நிலை பிரகடனம், சமூக வலை தள முடக்கம் மற்றும் மக்களது கோரிக்கைகளின் பேரில் ஏற்புடைய ஒரு தீர்வை பெறுவதிலான தோல்வி என்பன உள்ளடங்கலான அதிகாரத்திலுள்ளவர்களது நடவடிக்கைகளினாலேயே போராட்டத்தை மோசமடையச் செய்தது என்பதனையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கருத்திற்கொள்கின்றது.

மக்களது குரல்களை கேட்டு அவர்களது எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்வதே தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்களுக்கு சாத்தியமான ஒரே தீர்வு என்பதே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கருத்தாகுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேவையற்ற...

பாதுகாப்புச் செயலாளர் நாட்டு மக்களிடம் விடுத்துள்ள விசேட வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: மரியாதைக்குரிய மகா சங்கத்தினர், உட்பட அனைத்து மதத் தலைவர்கள், பெற்றோர்கள், நண்பர்கள், குழந்தைகள் மற்றும் அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் ஒருவேண்டுகோள்,

வன்முறையை தவிர்க்குமாறு உங்கள் அனைவரிடமும் முதலில் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டில் நிலவும் பரபரப்பான சூழ்நிலை காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் திரண்டு ஒழுங்கமைக்கப்பட்ட தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

"அமைதியான போராட்டம்" என்ற தொனிப்பொருளின் கீழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக பிரதிநிதித்துவப்படுத்துவதாக இந்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவ்விடயத்தில் இரண்டு குழுக்கள் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. ஒரு பிரிவினர் அமைதியான முறையில் போராட்டம் நடத்தி அமைதியாக கலைந்து செல்கின்ற அதேவேளை மற்றைய குழு பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து, முக்கிய வீதிகள் மற்றும் பொது இடங்களில் மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வன்முறைப் போராட்டங்களை வேண்டுமென்றே நடத்துவதாகத் தெரிகிறது.

அவசரகால நிலை நடைமுறையிலிருக்கும் பின்னணியில், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அமைதியான போராட்டங்கள் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளலாம்.

என்றாலும், அமைதிப் போராட்டங்களை நடத்துவது என்ற போர்வையில் செயல்பட்டு, அமைதியை நிலைநாட்டுவதில் உறுதி பூண்டிருக்கும் பாதுகாப்புப் படையினரை ஒரு சங்கடமான நிலைக்கு உட்படுத்தி தனியார் சொத்துக்களை சேதப்படுத்தும் அதேவேளையில், இந்த பிரசாரம் வன்முறைத் தன்மையின் காரணமாக ஜனநாயகத்தின் கட்டமைப்புக்கு அப்பால் சென்றுள்ளது. சில பகுதிகளில், போராட்டக்காரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சென்று வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டுகளை வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். மேலும், நேற்றைய தினம் பல குழுக்கள் திட்டமிடப்பட்ட வகையில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, போராட்டங்களுக்காக வீட்டை விட்டு சென்றிருக்கும் மக்களின் வீடுகள் திருடர்களால் உடைக்கப்பட்ட சந்தர்ப்பங்களுமுள்ளன என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பொதுமக்களைப் பாதுகாப்பதில் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படும் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் பொலிஸார், இந்த போராட்டங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

ஜனநாயக ரீதியில் நடைபெறும் அமைதியான போராட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், வன்முறைச் செயல்கள் தடுக்க நடவடிக்கை எடுப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அமைதியை நிலைநாட்ட பாதுகாப்புப் படையினர் செயல்படும் அதேவேளை வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த தயங்க மாட்டார்கள் என்றும் நான் மேலும் வலியுறுத்துகிறேன். நாட்டு மக்கள் தேவைப்பட்டால் தங்கள் ஜனநாயக உரிமையாக அமைதியான முறையில் போராட்டங்களை நடத்துமாறும் பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், தீவைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருக்குமாறும் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் வேண்டுகோள் விடுக்கின்றேன். மேலும், பல்வேறு நோக்கங்களுக்காக வன்முறையைத் தூண்டுபவர்களிடம் ஏமாறாது இருக்குமாறும் வேண்டுகின்றேன். இறுதியாக, உங்கள் அனைவருக்கும் அமைதியான மற்றும் மகிழ்ச்சியான நாளை வேண்டி வாழ்த்துகிறேன்.

## தவக்கால சிந்தனை



### பாவத்தின் தீய விளைவுகள்

"பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை" என நம் ஆண்டவர் இயேசு உறுதியாக தெரிவிக்கின்றார்.

நாம் அனைவருமே பாவிகள். நம் ஆதி பெற்றோரான ஆதாம், ஏவாள் முதல் மனித குலம் பாவத்தைக் கட்டிக் கொண்டே தொடர்ந்து வந்துள்ளது.

இன்றைய நற்செய்தியில் நம் ஆண்டவர் இயேசு,பாவம் செய்பவர்களை பற்றி குறிப்பிடுகின்றார். எவ்வாறென்றால் ஒருவர் மனம் பொருந்தி நீதி, நேர்மையற்ற செயல்களில் மற்றவர்களுக்கோ அல்லது அடுத்தவர் சொத்துக்கோ ஆசைப்பட்டு தகாத வழியில் செயற்படும் போது உண்மையாகவே அவர் பாவம் செய்கின்றார் என்கின்றார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்தவையும் இவைதான். அதற்காகவே மனித குலத்தை பாவத்திலிருந்து மீட்டெடுப்பதற்கு நம் ஆண்டவர் இயேசு இந்த பூமியில் மனிதனாக அவதரித்தார்.

அவரது பிள்ளைகளாகிய நாம் எமக்கு அவர் வழங்கியுள்ள இந்த வாழ்க்கையில் இவ்வுலக நாட்டங்களுக்கு முக்கியம் கொடுத்து நம்மையே நாம் இழந்து நாம் பாவிகள் ஆவதற்கு வழி நடத்தப் படுகின்றோமா என்பதை சிந்திக்க வேண்டும்.

இந்த தவக்காலம் அவ்வாறான சிந்தனைக்கான வாய்ப்புகளை நமக்கு அதிகமாக வழங்குகின்றது. நமது பாவங்களுக்காக நாம் மனம் வருந்தி இறைவனது பிள்ளைகளாக நாம் வாழ்வதற்கான அழைப்பை இந்த தவக்காலம் நமக்கு விடுக்கின்றது.

இக்காலங்களில் நாம் இருக்கின்ற பாவ நிலையை உணர்வோம்.

அந்த பாவ நிலையிலிருந்து நாம் மனம் திரும்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

தவக்காலத்தில் நாம் பல்வேறு ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த ஒறுத்தல் முயற்சிகள் மட்டும் நம்மை இறைவன் பால் வழி நடத்தாது. நம் பாவங்களை நாம் நினைத்து அதிலிருந்து விடுபட்டு மீண்டும் பாவத்தில் விழாது இருக்கும்படி மனதில் உறுதி பூணுவது அவசியமாகும். பாவம் நம்மை கடவுளிடமிருந்து பிரித்து சாத்தானின் வழியில் பயணிப்பதற்கான வாய்ப்புகளையே உருவாக்கும்.

நாம் மிக எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். எந்த விதத்திலும் சாத்தானுக்கு இடம் கொடாமல் கடவுளை அண்டி கடவுளுடன் வாழ்வதற்கு அவரது அருள் வேண்டுவோம்.

எல்.செல்வா...

## சு.க எம்.பிக்கள் 4 பேர்...

மக்கள்மேலும் பாதிக்கப்பட்டனர். ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். 20 ஆவது திருத்தத்தை இரத்து செய்து 19 ஆவது திருத்தத்தை கொண்டு வரவேண்டும். மக்கள் நலனுக்காக அரசாங்கம் செயற்பட வேண்டும். 14 சு.க. எம்.பிக்களும் இன்று (நேற்று) முதல் "சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளனர் என்றார்.

இதற்கமைய மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, தயாசிறி ஜயசேக்கர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகிய வண்ண, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, ஜகத் புஷ்பகுமார, ஷான் விஜேலால், சாந்த பண்டார, துஷ்மந்த மித்ரபால, சுரேன் ராகவன், அங்கஜன் இராமநாதன், சம்பத் தசநாயக்க ஆகியோர் சுயாதீனமாக செயற்படுவர். பாராளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளையும் சபாநாயகர் கூட்டி நாடு முகம்கொடுத்துள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்கவும் அமைதி நிலையை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றேல் மோசமான நிலை ஏற்படும். அனைத்து தரப்பினருடனும் பேசி நிலைமையை அமைதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (பா)

## நிதி அமைச்சர் அலி சப்ரியும்...

சந்தர்ப்பம் வழங்குவதற்காக, இந்த தீர்மானித்தை தான் எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவும் தனது ராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளதாக அறிவித்துள்ளார். தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்கால அரசை ஏற்படுத்த...

சபிக்கும் என தெரிவித்துள்ளா அவர், இந்த பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை கைவிடவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 19ஆவது திருத்தத்தை...

பொருளாதார நிலைமையால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள மோசமான பாதிப்புகளை தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கும் அவர்கள் ஆதரவளிப்பார்கள் என குறிப்பிட்டுள்ளார். தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பாராளுமன்ற பொறிமுறை மூலம் தீர்வை காண்பதற்கான முயற்சிகளை சபாநாயகர் முன்னெடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளிற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆதரவளித்துள்ளார்.

## மறைந்த பேராசிரியர்...

ஏராளமானோர் தமது அஞ்சலியை செலுத்தி வருகின்றனர். பேராசிரியர் சந்திரசேகரம், காலி பிரதேசத்தில் தங்கியிருந்தபோது நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார்.

## மக்களின் விருப்பத்தை...

அத்துடன் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையின் போது கருத்து தெரிவிக்கையிலேயே மருதபாண்டி ராமேஸ்வரன் எம்.பி. இ.தொ.கா.சார்பில் இவ்வாறு தெரிவித்தார்.

## பிரதி சபாநாயகர் நேற்று...

சுதந்திரக் கட்சி நேற்றுமுன்தினம் தீர்மானித்திருந்தது. இதனையடுத்து பிரதி சபாநாயகர் பதவியை தாம் இராஜினாமா செய்வதாக ரஞ்சித் சியம்பலபிட்டிய கடிதம் மூலம் நேற்று அறிவித்துள்ளார்.

## TNA ஒருங்கிணைப்பு குழுவை...

சூழலைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கி ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டவேண்டும்என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

## உலக வங்கி ADB... 03ஆம் பக்கத் தொடர்

ஆகியவற்றின் மூலம் நாம் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் சீனா, ஜப்பான், தென் கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். அதேவேளை நிதிக்குழுவின் தலைவர் வங்கிகளின் தற்போதைய நிலைமையை கவனத்திற்கொண்டு வங்கிகளைப் பாதுகாப்பதற்கான வலையமைப்பொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் அபிவிருத்திக்கான வரவு, செலவுத்திட்டத்தை விடுத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வரவு, செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

## வன்முறை, குழப்பங்கள்... 03ஆம் பக்கத் தொடர்

எனினும், குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்படுவதற்கு எவருக்கும் அனுமதியில்லை. அதேபோல், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள். இது தொடர்பில் உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தீ வைப்பு சம்பவங்கள், அத்துமீறி நுழைதல் போன்ற வன்முறைகளில் ஈடுபடுவதாகவும் அமைதியின்மையை தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஏனையோர் வீடியோ ஊடாக அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது. அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு எந்தவொரு நபருக்கும் உரிமை உள்ளது எனினும், அமைதியின்மையை தோற்றுவித்து, வன்முறைகளை ஏற்படுத்த முயற்சிப்போர் கைது செய்யப்படுவார்கள் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேராசிரியர் சந்திரசேகரம்... 03ஆம் பக்கத் தொடர்

இவரது புலமை ஆளுமை வித்தியாசமானது. அவரது மனோபாவம், நடத்தை அனைவராலும் புரிந்து கொள்ளத் தக்கது. இவர் மீது அனைவரும் ஈர்ப்புக் கொண்டதற்கு இவையே காரணமாகும். கற்றோர் குழாமுடன் மட்டுமன்றி அவரவர் மட்டத்திற்கு ஏற்ப சகஜமாகப் பழகுபவர். தான் இருக்கும் இடத்தை எப்போதுமே கலகலப்பாக வைத்திருக்கும் இவர் அனைவருடனும் சேர்ந்து செயற்படும் நல்லுள்ளம் கொண்டவர். இவரது இழப்பினை ஈடுசெய்ய இயலாது. இவர் அனைவரது மனதிலும் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

1971 வங்கதேச இன அழிப்புக்கு

# பாகிஸ்தான் பொறுப்பேற்க வேண்டும் சர்வதேச அமைப்பு வேண்டுகோள்




வங்கதேச விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த இன அழிப்பு படுகொலை தொடர்பாக பாகிஸ்தானை பொறுப்பாளியாக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் இன அழிப்பாக இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தெற்காசிய ஜனநாயக சம்மேளனம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அனைத்து மனித உரிமை போராளிகளும் வங்கதேச மக்களுடன், இணைந்து இந்த இன அழிப்புக்கு பாகிஸ்தானை பொறுப்பாளியாக்க வேண்டும் என்று இச் சம்மேளனத்தின் நிறைவேற்று பணிப்பாளரான போலோ கஸாகா கூறியுள்ளார்.

1971ம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தான் என அறியப்பட்ட பிரதேச வங்காள மக்கள் சுதந்திரம் கோரி போராடத் தொடங்கினார்கள். அவாமி லீக் என்ற கட்சியின் தலைவரான முஜிபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற சுதந்திர போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கு பாகிஸ்தான் கடுமையான அடக்குமுறைகளை கையாண்டது. இப்போராட்டத்தின் விளைவாக சுமார் 30 இலட்சம் பேர் மடிந்ததாகவும் இரண்டு இலட்சம் பெண்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாயின. ஒரு கோடிக்கும் அதிகமான வங்காளிகள் எல்லை தாண்டி இந்தியாவில் அடைக்கலம் பெற்றனர். இதன் விளைவாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர்மூண்டு இறுதியில் கிழக்கு பாகிஸ்தான் வங்கதேசமாக சுதந்திரம் பெற்று தனிநாடானது. இச் சுதந்திரப் போராட்ட காலத்தில் பாகிஸ்தான் இராணுவம் இன அழிப்பில் ஈடுபட்டதாக வங்காளிகள் கருதுகின்றனர். இதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு பாகிஸ்தானை இச் செயல்களுக்கு பொறுப்பாளியாக்க வேண்டும் என வங்கதேச மக்கள் கருதுகின்றனர். கடந்த ஐம்பது ஆண்டுகளாக வங்கதேசத்தில் இடம் பெற்ற இக்குற்றச் செயல்களுக்கு பாகிஸ்தான் மன்னிப்பு கோரவில்லை.


சீட்டிழுக்கப்பட்ட திகதி 04.04.2022
திங்கட்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
அச்சிடபட்ட திகதி 03.04.2022
ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் - 1232
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,445,640.00
வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள்: ரிஷபம் 3 8 7 8 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,837,248.00

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /04 /03
சீட்டிழுப்பு இலக்கம் : 756
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,761,300.00
வெற்றி இலக்கினம் F | வெற்றி இலக்கங்கள் 29 41 57 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,261,397.20

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /04 /04
சீட்டிழுப்பு இலக்கம் : 757
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,365,560.00
வெற்றி இலக்கினம் T | வெற்றி இலக்கங்கள் 36 50 67 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,261,397.20

கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1074
டிக்கட் அச்சிடப்பட்ட திகதி : 2022.04.03
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,897,180.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,060,982.00
ஆங்கில எழுத்து X | சுப்பர் நம்பர் 24 | வெற்றி எண்கள் 04 11 21 48
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : infor@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




தினகரன் பத்திரிகையின் 90ஆவது ஆண்டு நிறைவு விழா தர்கா நகர் மற்றும் பேருவளையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதன்போது சமூக சேவைக்கான விருதை அல்ஹாஜ் ஏ. பி. எம் .ஃஸுஹைர் ஜே.பி.க்கு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பாஸி ஃஸுபைர் வழங்கி வைத்த போது,...

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் மறைவுக்கு

## அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு அனுதாபம்

இலங்கையின் பிரபல மூத்த தமிழ் கல்விமான் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் மறைவு இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்ககளுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இவரது மறைவு தமிழ் சமூகத்தில் நிரப்ப முடியாத பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல.

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் மறைவையொட்டி அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசாங்கத்திலும், சமுதாய அமைப்புகளிலும் பல்வேறு பதவிகளை அலங்கரித்து பாரிய சேவைகளை குறிப்பாக தமிழ் மக்களுக்கும், பொதுவாக முழு நாட்டுக்கும் செய்துள்ளார். எத்தகைய உயர் பதவிகளை வகித்தபோதிலும் எந்தவித பகட்டும் ஆடம்பரமும் இல்லாமல் எல்லோருடனும் நட்போடு பழகும் பண்பாளர். தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்து கலை இலக்கியத்துக்கும் தொண்டாற்றியுள்ளார்.

பேராசிரியரின் பிரிவால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கும், தமிழ் சமூகத்துக்கும், நாட்டு மக்களுக்கும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றது.

## 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

2021ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொருமுறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை** பெற்றுக் கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தேர்தல் ஆணைக்குழு**
**011-2868441 / www.elections.gov.lk**

# அறிவித்தல்

## உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அதிகாரம்)

2012 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் திருத்திய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச்சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் செய்யப்படும்.

## அறிவித்தல்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் (262 அதிகாரம்) இனால் திருத்திய 2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தினது ஒழுங்கு விதிகளின்படி, வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நூபே ஹேவகே ரோய் நிஷாந்த ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம் வடமத்திய மாகாண பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிக்கு ஒருவரை தெரிவு செய்வதற்கான கூட்டம் 2022.04.08 ஆம் திகதி மு.ப.11.00 இற்கு திம்புலாகல பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**2022.03.29**
**அநுராதபுரத்தில் அமைந்துள்ள**
**வடமத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்**

**என்.எச்.ஆர்.நிஷாந்த**
**உள்ளூராட்சித் ஆணையாளர்**
**வட மத்திய மாகாணம்**

**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்: -

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி சாவித்திரி ஐ. பணாபொக்கே 81 9/2, வார்ட் பிளேஸ், கொழும்பு 7 | கொரியா குடியரசிற்கான இலங்கையின் தூதராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திரு. அஹமட் லெப்பை சபருல்லா கான், 48ஏ, சுவிசுத்தாராம வீதி, கொழும்பு 06. | ஓமான் சுல்தானகத்திற்கான இலங்கையின் தூதராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 3 | கொமடோர். எச்.எஸ். பாலசூரிய இலக்கம் 428 7/12, கோனஹேன தோட்டம், கடவத்த | இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, “செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே” என்ற விலாசத்திற்கு 2022 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்ற செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2022 ஏப்ரல் 06 ஆம் திகதி**


# இலங்கை வங்கி

மேல் மாகாணம் வடக்கு இலங்கை வங்கி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பின்வரும் நகரங்களில் CRM இயந்திரங்களுக்கான அறைகளை நிறுவுவதற்கு பொருத்தமான வெற்றுக்காணி அல்லது கட்டடம் 10 வருட குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.
- மல்வான சந்தி
- மல்வதுஹிரிபிட்டிய
- நிவந்தம வடக்கு, ஜாஎல
- வேவல்தெனிய

குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் உத்தேசக் கட்டடம் / காணி நகர மத்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 10′6″ அடிகளைக் கொண்ட பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும். கட்டடத்துக்கு பின்புற நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- அவ்வாறு இல்லாவிட்டால் கட்டடத்தின் அகலம் குறைந்தபட்சம் 12 அடிகளாக இருத்தல் வேண்டும்.
- தரைக்குத் தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் அண்மிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- வெற்று நிலமாக இருந்தால், 10′6″X18′ அடிகளாக இருத்தல் வேண்டும். (189 சதுர அடிகள்)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் (குத்தகைக் காணியாக இருப்பின்) போன்ற ஆவணங்களின் பிரதிகளை 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“CRM இயந்திரத்துக்கான அறை - (குறித்த கிளையின் பெயரைக் குறிப்பிடவும்)”** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் - வடக்கு),
இலங்கை வங்கி,
2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்
கொள்ளுபிட்டிய.
தொலைபேசி : 0112 381 366 / 0115 865 151
தொலைநகல் : 0112 326 830
மின்னஞ்சல் : bocwpn@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

திவுலபிட்டிய நகரத்தில் எமது இலங்கை வங்கிக் கிளையை மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது.

உத்தேசக் கட்டடமானது நகரின் மத்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும் என்பதோடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- மாடிகளற்ற கட்டடம் எனின் தரைப் பரப்பு குறைந்தபட்சம் 5,500 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். கட்டடமானது இரு மாடிகளைக் கொண்டிருப்பின் கீழ்த் தளமானது குறைந்தது 3,800 சதுர அடிகளாக இருத்தல் வேண்டும். மீதமுள்ள பகுதி மேல் மாடியில் இருக்க வேண்டும்.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 50 அடிகள் கொண்டதாக நகர எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி அளவிலான அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 4 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம் என்பன வங்கிக்கு பொருத்தமான விதத்தில் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க 1,000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று உயர்வான இடத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
- குறைந்தது 03 கழிப்பறைகள் இருக்க வேண்டும். அவை ஆண், பெண் என்ற வகையில் வெவ்வேறாக பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதில் ஒன்று கட்டடத்தின் பின்புறம் அமைந்திருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தளத்துக்கு தரையோடு பதித்து உட்கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு கனரக இரும்பு கிறில் இடப்பட்டு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள் அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் திட்ட வரைபு, அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகளோடு எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(மேல் மாகாணம் - வடக்கு),
இலங்கை வங்கி,
2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்
கொள்ளுபிட்டிய.
தொலைபேசி : 011 238 1366 / 011 586 5151
தொலைநகல் : 011 232 6830
மின்னஞ்சல் : bocwpn@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

CRM இயந்திரமொன்றை நிறுவுவதற்கு பொருத்தமான வெற்றுக்காணி அல்லது கட்டடம் நீண்டகால குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.
- சந்தைக்கருகில், புலுங்குபிட்டிய, இரத்தினபுரி
- மாதம்பே, கஹவத்தை

உத்தேசக் காணி அல்லது கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடத்தின் முகப்பு குறைந்தபட்சம் 08 அடிகளைக் கொண்ட பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்ச நிலப்பரப்பு 08′x14′ (112 சதுர அடிகள்) அடிகளாக இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- மக்கள் இலகுவில் அண்மிக்கக் கூடிய மனதுக்குகந்த இடமாக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், அளவையியல் திட்டம் போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“CRM இயந்திரத்துக்கான அறை - குறித்த நகரத்தை குறிப்பிடவும்”** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(சப்பிரகமுவ மாகாணம்),
இலங்கை வங்கி,
சப்பிரகமுவ மாகாணக் காரியாலயம்
இல: 227, கொழும்பு வீதி,
இரத்தினபுரி.
தொலைபேசி : 045 222 2036
தொலைநகல் : 045 222 2314
மின்னஞ்சல் : bocsbp.@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




வரலாற்றுச் சிறப்புமிக்க தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய 3ஆம் பங்குனித்திங்கள் உற்சவம் நேற்று திங்கட்கிழமை (04) சிறப்புற இடம்பெற்றது. (படம்: யாழ்.விசேட நிருபர் தென்மராட்சி)

# சேதனப் பசளையை முழுமையாக பயன்படுத்தி சிறுபோக பயிர்செய்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

சேதனப் பசளையினை முழுமையாக பயன்படுத்தி சிறுபோக பயிர்செய்கையினை மேற்கொண்டு அதி உச்ச பயனைப் பெறும் வகையில் மாவட்ட அளவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளம் உள்ளிட்ட குளங்களின் கீழ் இவ்வாண்டு இருபத்திஐயாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பிலான பயிர் செய்கை குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

மாவட்டத்தின் பயிர் செய்கை நடவடிக்கைகள் தொடர்பில் அரச அதிபர் கருத்து தெரிவிக்கும் போது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக்குளம் உள்ளிட்ட குளங்களின் சிறு போக பயிர்ச்செய்கைக்கான கலந்துரையாடல்கள் அந்தந்த குளங்களின் கீழான விவசாய அமைப்புகளுடன் நடைபெற்று வருகின்றன.

வடமாகாணத்தின் பாரியகுளமான இரணைமடு நீர்ப்பாசனகுளத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளதுடன் இரணைமடு குளத்தின் கீழாக 15750 ஏக்கரில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 25000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு சிறுபோக பயிர்செய்கையானது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக சேதனப் உரத்தை பயன்படுத்தியே மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கான சேதனப் பசளைகளை வழங்கும் நடவடிக்கைகளை கமநல அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை பயிர்செய்கை நடவடிக்கைகள் பாதிக்காத வகையில் விவசாயிகளுக்கான எரிபொருளை வழங்குவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படும் அதேவேளை சேதனப்பசளை ஊடாக சிறுபோக பயிர்செய்கையினை மேற்கொண்டு அதிஉச்ச பயனைப் பெறும் வகையில் மாவட்ட அளவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# டிப்பர் வாகனத்தில் மோதி இளம் குடும்பஸ்தர் படுகாயம்

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி பரந்தன் ஏ35 வீதியில் நேற்றுமுன்தினம் இரவு டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் இருவரின் துணையுடன் டிப்பர் வாகன சாரதி தப்பிச்செல்ல இடமளிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி முரசு மோட்டைப்பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை மோதி தள்ளியுள்ளது. இளம் குடும்பஸ்தர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதன் போது படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். முரசுமோட்டை பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றியவாறு வேகமாக வந்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதி தள்ளிவிட்டு சென்றுள்ளது. இதுதொடர்பில் எந்த வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.


# இலங்கைக்கு கடத்தவிருந்த இருதலை மணியன் பாம்பு, 6 கிளிகள் மீட்பு



ராமநாதபுரம் ரயில் நிலையப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த அரிய வகை இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை வனத்துறையினர் நேற்று செவ்வாய்க்கிழமை (5) காலை மீட்டுள்ளதோடு, சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ராமநாதபுரம் ரயில் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (5) காலை சந்தேகத்துக்கிடமான முறையில் இருவர் நிற்பதாக வன உயிரின உதவிப் பாதுகாப்பாளர் கணேசலிங்கத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் வன உயிரின அதிகாரிகள் அப்பகுதிக்குச் சென்று இருவரையும் பிடித்து சோதனையிட்டனர். இதன்போது வாளியில் இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை வைத்திருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து அவற்றை உயிருடன் மீட்டதோடு, அவர்கள் வைத்திருந்த இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர். மேலும் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் இருவரும் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது.



## இருவர் கைது

இருவரும் தூத்துக்குடி பகுதியிலிருந்து இரு தலை மணியன் வகை மண்ணுளி பாம்பு, கிளிகளை ரயில் மூலம் ராமேஸ்வரத்திற்கு கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தனர். அதன்பின்னர் அங்கிருந்து இலங்கை வழியாக சீனாவுக்கு கொண்டு செல்லப்படவிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து அவர்கள் இருவரும் வனப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமரர் நா.வை.குகராசா நினைவு அரங்கு

இலங்கை குமரித் தமிழ் பணி மன்றம் நடாத்தும் முற்போக்கு சீர்திருத்த சிந்தனையாளர் சமூகப் பணியாளர் அமரர் திரு.நா. வை.குகராசா ( மணிவண்ணன் ) நினைவு அரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு கவிஞரும் எழுத்தாளருமான வண. முனை. து. சி. யோசுவா அடிகளார் தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டலுவல்கள் அதிகாரி திரு. பொன். இராசதுரை, கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராசான், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையின் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் கண்டியிலுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், சமூகத் தொண்டர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். சமூகத் தொண்டர் வே. சிதம்பரநாதன், கலாபூசணம், இரா. அ. இராமன், சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வளவை வளவன். மா. செல்லத் தம்பி, கலாபூசணம் இ. நடராசா, வள்ளுவதாசன் நா. சிவராசா. அண்ணாவியார் அ. அமிர்தநாயகம், திருவேணிசங்கமம், சோ. செல்வராணி, கைமணியம், நா. முருகானந்தம், பார்வதி நல்லதம்பி. கவிதா சண்முகநாதன், ச.மு.அருளம்பலம் இன்னும் பல்துறை சார்ந்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நினைவுப் பேருரையினை ஏ. அருந்தவசீலன் இ. மீனலோகினி, க. ஜெயக்குமார் அவர்களும் சிறப்புரையினை பூநகரி மேனாள் பள்ளி முதல்வர் சைவப்புலவர் கு. சுமுகலிங்கம் கௌரவிப்பினை இலங்கை குமரி தமிழ் மன்றத்தின் நிறுவுநர் கலாபூசணம் நா. வை. குமரிவேந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# கரைச்சி பிரதேச சபையில் ஊழல் முறைகேடுகள்

## உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணிப்பு

கிளிநொச்சி குறூப் நிருபர்

கரைச்சி பிரதேச சபை ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு ஏழு நாட்களில் இடைக்கால அறிக்கையும், 14 நாட்களில் இறுதி அறிக்கையினையும் சமர்பிக்குமாறும் ஆளுநரின் மேலதிக செயலாளர் நிருபராஜ் லாகினிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கரைச்சி பிரதேச சபையின் தற்போதைய நிர்வாகத்தில் அதிகளவான ஊழல்கள், முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் பலரும் பல தடவைகள் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

அத்தோடு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமும் கரைச்சி பிரதேச சபை ஊழல்கள் கடந்த காலத்தில் வெளிக்கொண்டுவரப்பட்டிருந்தன.

இருப்பினும் அதற்கு எதிராக அதிகாரிகளால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென பொது மக்களால் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன. அத்தோடு சபையில் எதிர்தரப்பு உறுப்பினர்களும் தொடர்ச்சியாக சபை ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பில் குரல் எழுப்பியிருந்தனர். இந்நிலையிலேயே வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிடம் ஊழல்கள்,முறைகேடுகள் தொடர்பில் ஆவணங்களுடன் முறையிட்டதை தொடர்ந்து உடனடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

ஆளுநரின் துரித நடவடிக்கையினை தொடர்ந்து பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக கரைச்சி பிரதேச சபையின் ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# சுகாதார சேவை அமைப்புக்கள் போராட்டம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)



நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக சுகாதார சேவைகள் அமைப்புக்களின் 13 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து ஏழு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம் பெற்றது.

நேற்று செவ்வாய்கிழமை (05.04.2022) நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அவசரகால சட்டத்தை ரத்து செய், கைது செய்தவர்களை உடனடியாக விடுதலை செய், என்ற கோரிக்கைகளை முன்வைத்ததுடன் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கும் கண்டனம் தெரிவித்தனர். அதுமட்டுமின்றி மருத்துவ பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும், அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும், போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





வவுனியா, பாவற்குளம், அல் அமீன் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 8 வகுப்பறைகளைக் கொண்ட 2 மாடிக் கட்டடம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா ஆகியோர் இணைந்து அதனை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர். (படங்கள்: வவுனியா விசேட நிருபர்)




# கெஹெலிய ரம்புக்வெல்லவின் வீடு தாக்குதல் சம்பவம்

## 05 பொலிஸார் வைத்தியசாலையில்

**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி, அனிவத்த பிரதேசத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வீட்டை தாக்க வந்த குழுவினால் தாக்குதலுக்குள்ளான 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சரின் வீட்டை தாக்குவதற்கு குழுவொன்று திட்டமிட்டுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் விசேட அதிரடி பொலிஸ் மற்றும் கண்டி பொலிஸ் அதிகாரிகள் குழு சம்பவ இடத்திற்கு வந்துள்ளனர்.

அப்போது அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் இருளில் கற்கள் விழுவதை தடுக்க முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கூட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர் எனவும், சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.குறித்த சம்பவம் தொடர்பாக கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# டிப்பர் ரக வாகனம் குடைசாய்ந்து மூவர் படுகாயம்



**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் டிப்பர் ரக வாகனமொன்று நேற்று (05) குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (05) அதிகாலை நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த டிப்பர் ரக வாகனமே இவ்வாறு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் பயணித்த சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீகிரியாவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகரிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

சுற்றுலாத்தலமாக இந்நாட்டில் பிரசித்தி பெற்ற இடமாக காணப்படும் சீகிரியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக கணிசமானளவு அதிகரித்துள்ளதாக மத்திய கலாசார நிதிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் கொவிட் 19 தொற்று காரணமாக வெளிநாடுகளில் இருந்து சீகிரியாவை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் மிகவும் வீழ்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டது.

நாட்டின் தற்போது சிறந்த சூழல் ஏற்பட்டுள்ளதால் இங்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து நாளாந்தம் 20002500 வரையான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். இதன்மூலம் சுற்றுலா பயணிகளிடம் அறவிடப்படும் நுழைவு அனுமதி கட்டணமாக நாள் ஒன்றுக்கு பல இலட்சம் ரூபா வருமானமாக மத்திய கலாசார நிதியம் கிடைக்கப் பெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார்

# பேராசிரியர் சந்திரசேகரத்தின் ஈடுசெய்ய முடியாததொன்றாகும்

## அரவிந்தகுமார் எம்.பி அனுதாபச் செய்தி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை மண் பெற்றெடுத்த தவப் புதல்வனான மூத்த பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரத்தின் இழப்பு, பதுளை மட்டுமன்றி, முழு மலையத்திற்குமே பேரிழப்பாகுமென்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சந்திரசேகரத்தின் மறைவினையொட்டி, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், அனுதாபச் செய்தியொன்றினை விடுத்துள்ளார். அவ் அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,..

பேராசிரியர் கல்வித்துறை வரலாற்றில், தனக்கென்ற தனித்துவமானதொரு இடத்தை அவர் இறக்கும் வரை தக்க வைத்திருந்தார்.

மலையகத்தில் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கையையும் முதன் முதலில் முன்மொழிந்தவரும் பேராசிரியரே ஆவார்.

பதுளை ஊவாக்கல்லூரி, தெல்லிப்பழை, மஹாஜனக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், ஆரம்பக் காலத்திலேயே சமூக மேம்பாடு கருதி, ஆழமாக சிந்தித்துச் செயல்பட்டவர். சமூகத்தின் விடிவிற்காக செயற்பட்ட இமயம், தமது 78 வயதில் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு, பெரும் துயரடைந்தேன்.

அவர் எம்மை விட்டு பிரிந்து சென்றாலும் அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே அவருக்கு செய்யும் அர்ப்பணமாகும்.

இவரது இழப்பு, ஈடுசெய்ய முடியாததோடு, அவரது பிரிவால் துயரமடைந்திருக்கும் குடும்பத்தினரது துயரில், நானும், எனது குடும்பத்தினரும் எனது மலையக உறவுகளும் பங்கேற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொட்டகலை கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் ஆர்ப்பாட்டம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

கொட்டகலையில் அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் வரிசை வாழ்க்கை நிறுத்து, பிச்சை எடுக்கும் நிலை வேண்டாம்,மக்கள் வாழ்வாதாரத்தில் கை வைக்காதே என்ற வாசகம் எழுதப்பட்ட பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

அத்தோடு, தலைகளில் கறுப்பு பட்டிகளை அணிந்திருந்ததோடு, கோஷங்களையும் எழுப்பினர். பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.







வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி மாத்தளையில் எல்வல பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பலசரக்கு விற்பனை நிலையம் மற்றும் தகவல் மைய கட்டடம் அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹன திசாநாயக்க, நாலக கோட்ட கொடை ஆகியோர் கட்டடத்தை திறந்து வைப்பதை காணலாம்.

படங்கள்: மாத்தளை சுழற்சி நிருபர்

# கொட்டும் மழையிலும் இராகலையில் எதிர்ப்பு போராட்டம்



நுவரெலியா இராகலை நகரத்தில் கடும் மழையிலும் பாரிய போராட்டம் ஒன்று நேற்று (05) மாலை மூன்று மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

இராகலை தபால் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமான போராட்டம் பேரணியாக இராகலை முருகன் ஆலயத்திற்கு அருகில் வந்தடைந்து அவ்விடத்தில் கடும் மழையையும் பொருட்படுத்தாது முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் மலையக பங்காளி கட்சிகளின் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் நூற்றுக்கணக்கானவர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வு,ஜனாதிபதியின் செயற்பாடு ஆகியவற்றை கண்டித்து கோசமிட்டும் பதாகைகளை ஏந்தியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## கொட்டகலை பகுதியில்

# அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**ஹற்றன் விசேட நிருபர்**

அதிகரித்துள்ள விலையுயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன. மலையகப் பகுதியில் நேற்று முன்தினமும் நேற்றும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் கொட்டகலை நகரில் அதிகரிக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று கொட்டகலை நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது,

ஆர்ப்பாட்டக்காரர்கள் சவப்பெட்டியினை வைத்து அதிகரித்து விலையினை கூறி ஒப்பாரி வைத்து தப்படித்து அழுது கோசமிட்டனர்.

அதனை தொடர்ந்து ஆர்ப்பாட்டகாரர்கள் சவப்பெட்டியினை சுமந்த வண்ணம் கொட்டகலை டிரேட்டன் ஆலயத்திற்கு அருகாமையிலிருந்து கொட்டகளை புகையிரத கடவை வரை வருகை தந்து அதனை தொடர்ந்து களைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கொட்டகலை பிரதேசத்தில் உள்ள தோட்டத்தொழிலாளர்கள் இளைஞர்கள், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.குறித்த ஆர்ப்பாட்டம் காரணமாக பொது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

# விலங்குக்கு வைத்த கட்டுத் துவக்கில் சிக்கி உயிரிழப்பு

**தம்புள்ள தினகரன் நிருபர்**

காட்டு விலங்குகளை வேட்டையாடும் நோக்கில் கட்டுத் துவக்குப் பொறி வைத்த நபர் ஒருவர் அதனைப் பரிசோதனைக் குட்படுத்திய வேளையில் பொறியில் சிக்கி உயிரிழந்திருப்பதாக தம்புள்ள பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (05) இரவு தம்புள்ள நாரங்கஸ்யாய பிரதேசத்தில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் எத்தாபெந்திவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட கே.ஜீ.சுமித் புஸ்பகுமார (35) என்பவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலையில் குறித்த கட்டுத் துவக்குப் பொறியை வைத்து விட்டு மீண்டும் நேற்று அதிகாலையில் அவ்விடத்திற்குச் சென்று அதனை பரிசீலனை செய்து கொண்டிருக்கையில் கால் இடறி பொறிக்குள் விழுந்ததால் இவ் அனர்த்தம் ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். தம்புள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 'தர்கா நகரின் பொக்கிஷங்கள்' நூல் வெளியீடு









**பேருவளை விசேட நிருபர்**

தர்கா நகரின் பொக்கிஷங்கள் எனும் நூலின் வெளியீட்டு விழா தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் நடைபெற்றது. தர்கா நகர் வரலாறு அடங்கிய இந்த நூலை தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் வெளியிட்டுள்ளது. ஊடகவியலாளர் முஹம்மத் இம்தியாஸ் நூலை எழுதியுள்ளார்.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஜோர்தான் நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் ஏ.எல்.எம் லாபிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி மௌலவி எம்.ஆர்.எம் ஸில்மி (நூரி), பேருவளை பிரதேச சபை எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் ஏ.ஆர்.எம் பதியுத்தீன்,சமூக சேவையாளர் எம்.பாஸி ஸுபைர் உட்பட தர்கா நகரைச் சேர்ந்த உலமாக்கள், புத்திஜீவிகள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நூலின் முதல் பிரதியை ஜோர்ந்தான் நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் ஏ.எல்.எம் லாபிர் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

# கிழக்கின் குரல்



# தமிழ், முஸ்லிம்களின் கல்விப்பாலமாக திகழ்ந்தவர் அமரர் பேராசிரியர் சந்திரசேகரம்

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**

கல்வித்துறையில் தமிழ்முஸ்லிம் உறவுப் பாலமாகத் தொழிற்பட்டவர் பேராசிரியர் சந்திரசேகரம்.

ஆசிரிய கல்வி மேம்பாட்டுத்துறையில் அவரின் பணி அளப்பரியதாகுமென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் கல்வித்துறை சார்ந்த பேராசிரியர்கள் பலர் இருந்தும் ஆசிரிய வாண்மை விருத்தியில் ஆசிரியர் சமூகத்துடன் நேரடியாகவும், நூல்கள் மூலமாகவும் தொடர்புள்ள ஒரு கல்வியியலாளராக பேராசிரியர் சந்திர சேகரம் செயற்பட்டார்.

கல்விமாணி, முதுகலை கல்விமாணி, பட்டப்பின் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி கல்வித்துறை என அனைத்திலும் தம் பங்களிப்பை இவர் நல்கினார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை உள்வாரியாக ஆரம்பித்துக் கொண்டு செல்வது பேராசிரியரின் பணி முக்கியமாக இருந்தது. இலங்கையின் முன்னணி தேசியப் பத்திரிகைகளில் வாழும்வரை எழுதிக் கொண்டிருந்த ஒரே பேராசிரியராக இருந்த இவர், கல்விப் புலத்தால் என்றும் நினைவு கூரத்தக்கவராகவே செயற்பட்டார்.

கல்வித் துறையில், தாம் சார்ந்த கருத்துக்களை காய்தல், உவத்தலின்றி முன்வைப்பதில் சந்திரசேகரம் அவர்களுக்கு தனி இடமுண்டு. பல்கலைக்கழகம் சார்ந்த ஆய்வு முயற்சிகள் பலவற்றிலும் கல்வித்துறை சார்ந்த முற்போக்கான கருத்துக்களை முன்வைத்த பேராசிரியரின் கருத்துக்கள், கல்விக் கொள்கை மற்றும் பாட விரிவாக்க மாற்றங்களுக்கும் உந்துசக்தியாக அமைந்துள்ளன. முஸ்லிம் கல்வியியலாளர்கள் மற்றும் எழுத்துத்துறை சார்ந்தவர்களுடன் மிக நெருக்கமான உறவு கொண்டு அவர்களை தட்டிக் கொடுப்பதில் முன்நின்ற பேராசிரியரின் மறைவு தமிழ் பேசும் கல்விப் புலத்திற்கு பேரிழப்பாகும் எனவும் அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாநகர சபையின் நான்காண்டு நிறைவு வைபவம்

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**

மட்டக்களப்பு மாநகரசபையின் நான்காண்டுகள் பூர்த்தி வைபவங்கள் நேற்று (05) நடைபெற்றன.

இந்த மாநகர சபைக்கு இருபது வட்டாரங்களிலிருந்தும் 38 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களைத் தெரிவு செய்து நான்கு வருடங்கள் நிறைவடைந்துள்ளதையிட்டு இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

மாநகர மண்டபத்தில் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. சபை இயங்கத் தொடங்கிய நான்கு ஆண்டுகளில் வரிப்பணம் செலுத்திய மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளின் மீளாய்வு இங்கு பரிசீலிக்கப்பட்டது. மேலும், நீடிக்கப்பட்டிருக்கும் ஒரு வருட காலத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய வேலைகளும் முன்மொழியப்பட்டன.

மாநகரசபையால் கடந்த காலங்களில் செய்யப்பட்ட வேலைகள் அடங்கிய நினைவுக் கையேட்டின் முதல் பிரதியை, மாநகர ஆணையாளருக்கு சபையின் மேயர் வழங்கி வைத்தார்.

பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மாநகரசபையின் உறுப்பினர்கள் நிருவாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாநகரசபையின் புதிய ஆணையாளராக நா.மதிவண்ணன் கடந்த வெள்ளிக்கிழமை (01) கடமையேற்றமை குறிப்பிடத்தக்கது.

# மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

ஏறாவூர் குடியிருப்பு பிரதேசத்துக்கு மதுபானங்களை சட்டவிரோதமாக எடுத்துச் சென்றவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பிலிருந்து பட்டா ரக வாகனத்தில் விற்பனைக்காக இவர், இதை எடுத்துச் சென்றுள்ளார். இதன்போது, 250 போத்தல்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் உஷாரடைந்து வீதிச் சோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது கோட்டமுனை பாலத்துக்கு அருகில் பட்டா ரக வாகனத்தில் மதுபானங்களை எடுத்துச் சென்ற வாகனத்தை அவதானித்ததும் வாகனம் சுற்றிவளைக்கப்பட்டது. இவ் வேளையிலே, இந்நபர் கைது செய்யப்பட்டார்.

# தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமை காரியாலயம் முற்றுகையிடப்பட்டதால், அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அத்தியாவசிய பொருட்களுக்கான விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகளை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக திருகோணலை வீதியூடாக மட்டக்களப்பு நகர் வரையில் பேரணி சென்றது. இந்த பேரணியில் பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இதனால், போக்குவரத்து நீண்டநேரம் பாதிக்கப்பட்டிருந்தது. நகருக்குள் வந்த ஆர்ப்பாட்ட பேரணி வாவிக்கரை வீதியுடாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமை காரியாலயம் வரையில் சென்று காரியாலயத்திற்கு முன்பாக கோசங்கள் எழுப்பப்பட்டன.




மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என கோசங்கள் எழுப்பப்பட்டன.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**காலி கோட்டையின் பழைய உட்செல்லல் வழிக்கு அருகாமையில் உள்ளூர் உணவுகளை விற்பதற்காக உணவகமொன்றை நடாத்திச் செல்வதற்காக இடப்பரப்பொன்றை வாடகைக்கு வழங்கல்**

**தேசிய மரபுரிமை, அரங்கேற்றக் கலைகள் மற்றும் கிராமிய கலைகள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சின் காலி மரபுரிமை மன்றம்**

**கேள்வி இல.: GHF/2022/PR/02**

01. Hall de Galle இற்கு அருகாமையில் காலி, பாலதக்ஷ மாவத்தையில் சிப்நரா கட்டிடத்தின் அறையொன்றில் உள்ளூர் உணவுகளை சமைத்து விற்பதற்காக மாதாந்த வாடகையில் வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய மரபுரிமை, அரங்கேற்றக் கலைகள் மற்றும் கிராமிய கலைகள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சின் காலி மரபுரிமை மன்றமானது விலைமனுக்களை அழைக்கின்றது.
02. காலி மரபுரிமை மன்றத்தின் அபிவிருத்திப் பிரிவிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 091 2246784)
03. வாடகைக் காலமானது மூன்று (3) வருடங்களாகும்.
04. அனைத்து விலைமனுக்களும் 2022 ஜூன் 7 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
05. 2022 ஏப்ரல் 6 ஆம் திகதிக்கும் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிக்குமிடையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 500 ரூபாவைச் செலுத்திய பின்னர், காலி மரபுரிமை மன்ற கணக்கிடல் பிரிவிலிருந்து நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தம் ஆகியன அடங்கலான விலைமனுப் படிவங்களின் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.
06. 2022 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு காலி, கோட்டை, ரம்பார்ட் தெரு, 12 ஆம் இலக்கத்திலுள்ள காலி மரபுரிமை மன்றத்தின் பிரதான அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றை நடைபெறும்.
07. முப்பத்தாறாயிரம் ரூபாவிற்கானதும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்டதும் காலி மரபுரிமை மன்ற தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதுமான 2022 ஜூன் 7 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனு உத்தரவாதமானது ரொக்கப் பணத்திலும் வரவு வைக்கப்படலாம்.
08. அனைத்து விலைமனுக்களும் மேலே விபரிக்கப்பட்டவாறான விலைமனு உத்தரவாதத்துடனும் மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறான மீளளிக்கப்படாத ஆவணத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் நிழற்படபிரதியொன்றுடனும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மூடும் திகதி மற்றும் நேரமானது பின்வருமாறு: 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மு.ப. 10 மணிக்காகும்.
10. இரு பிரதிகளில் உரிய முறையில் நிரப்பப்பட்ட படிவங்கள் இரு பிரதிகளில், மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தயாரிக்கப்பட்டு இரு தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு, பதிவுத் தபாலில் தலைவர், காலி மரபுரிமை மன்றம், இல. 12, ரம்பார்ட் தெரு, கோட்டை, காலி என்ற முகவரியிடப்பட்டு விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். வெளியக தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"BIDS FOR GALU BOJUNA RESAURANT"** என்ற சொற்கள் தெளிவாக அடையாளமிடப்படல் வேண்டும். மேலே குறிப்பிட்டவாறு தயாரிக்கப்பட்ட விலைமனுப் படிவங்கள் நேரடியாகவே கொண்டு வரப்பட்டு காலி மரபுரிமை மன்றத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்களின் மூடும் நேரம் மற்றும் திகதிக்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
12. தாமதமான அல்லது பூரணப்படுத்தப்படாத விலைமனுக்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
13. இந்த வாடகைக்கு வழங்கல் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பான இறுதி தீர்மானம் காலி மரபுரிமை மன்ற பெறுகைக் குழுவின் தீர்மானமேயாகும்.

**பராக்கிரம தஹாநாயக்க,**
**தலைவர்,**
**காலி மரபுரிமை மன்றம்,**
**இல. 12, ரம்பார்ட் தெரு, கோட்டை, காலி.**
**தொலைபேசி/ தொலைநகல் : 091-2246784**
**மின்னஞ்சல் : herifo@sltnet.lk**
**இணையம் : www.galleheritage.gov.lk**

## பெறுகை அறிவித்தல்

**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**

**கட்டுநாயக்க சீதுவ நகர சபை எல்லையினுள் அமைந்துள்ள வீதி விளக்குகள் சகிதம் வீதி முறைமையை வரைபடமாக்கல்**

கட்டுநாயக்க சீதுவ நகர சபை எல்லையினுள் அமைந்துள்ள வீதி விளக்குகள் சகிதம் வீதி முறைமை வரைபடமாக்கலுக்காக அச்சடிக்கப்பட்ட விலைமனுக்கள் உங்களிடமிருந்து 2022-04-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் போது மீளளிக்கப்படாத 500.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.

கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான சகல விலைமனுக்களையும் பின்வரும் விபரங்களுக்கு அமைவாக 2022-04-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், கட்டுநாயக்க சீதுவ நகர சபை, சீதுவ'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டுநாயக்க சீதுவ நகர சபை எல்லையினுள் அமைந்துள்ள வீதி விளக்குகள் சகிதம் வீதி முறைமை வரைபடத்தை தயாரிப்பதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

1. இயைபுடைய நிறுவனம் / சேவை வழங்குநர்களின் அடிப்படைத் தகைமைகள்
   i. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் இந்த வியாபாரத்திற்கு இயைபுடைய துறையில் 05 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.
   ii. கையடக்க தொலைபேசி செயலிகளைப் பயன்படுத்திய வடிவமைப்புகள் மற்றும் பாவனை தொடர்பில் 03 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

**நோக்கம்:**

- ➢ வீதி விளக்குகள் தொடர்பில் பூகோள தரவு முறைமையைத் தயாரித்தல் (கம்ப இலக்கம், விளக்கின் வகை, சராசரி உயரம், வீதியின் பெயர், புகைப்படம், அட்சர ரேகை, நீளவாக்க இலக்கம் உட்பட)
- ➢ வீதி வலையமைப்பு தொடர்பான பூகோள தரவு முறைமையைத் தயாரித்தல் (வீதியின் பெயர், சாதாரண நீளம், பயன்படுத்திய மூலப்பொருட்கள், நிலைமை, புகைப்படும், பாலம், மதகு)
- ➢ பாவிப்பதற்கு பொருத்தமான கையடக்கத் தொலைபேசி செயலியைப் உருவாக்குதல் மற்றும் பூகோள தரவை உள்ளடக்குதல் (இலக்கம், அல்லது பெயர், தெரிவு செய்யும் இயலுமை, புதிதாக சேர்த்துக்கொள்ளும் இயலுமை, நாளது தரவேற்றம் செய்யும் இயலுமை)
- ➢ செயலியை பயன்படுத்தும்போது பலவிதமான பிரவேச நிலைகள் (பிரவேசத்தின் பெயர் மற்றும் கடவுச்சொல் சகிதம்) வழங்குதல்
- ➢ சாதாரண மக்களும் பிரவேசிக்கும் இயலுமை, இதனூடாக நகர சபைக்கு அறிவித்தல்.

**நிபந்தனைகள்:**

01. செயற்றிட்டம் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் 06 மாத காலத்தினுள் குறித்த வேலை முடிக்கப்படல் வேண்டும்.
02. குறித்த செயற்றிட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துதல் தொடர்பில் அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல்
03. பராமரிப்பு நடவடிக்கைகளை எதிர்காலத்திலும் மேற்கொள்வதற்காக வருடாந்தம் உடன்படிக்கை செய்தல்
04. முறைமையில் ஏற்படக்கூடிய சிக்கல்களை 02 வேலை நாட்களினுள் சீர்செய்து கொடுத்தல்.

விலைமனுக்கள் 2022-04-27ஆம் திகதி பி.ப. 2.00 மணியானவுடன் கட்டுநாயக்க சீதுவ நகர சபை பெறுகைக் குழுவின் முன்னிலையில் உடன் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தில் விலைகளை மாற்றுதல், அழித்தல் மற்றும் ஏனைய சகல திருத்தங்களுக்கும் விண்ணப்பதாரரின் முழுமையான கையெழுத்தை இட்டு உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் தெளிவற்ற மற்றும் சான்றுபடுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் இறுதித் தீர்மானத்தை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**டீ. கே. சமித் நிஷாந்த பர்னாந்து,**
**தலைவர்,**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை.**
**சீதுவ.**

**2022-04-05ஆம் திகதி**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை அலுவலகத்தில்.**

# உடற்பயிற்சி நிலையம் திறப்பு



**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று மாநகர சபையின் ஏற்பாட்டில் மாநகர பொதுப் பூங்கா வளாகத்தில் உடற்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

மாநகர முதல்வர் அகமட் ஸகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்து கொண்டு உடற்பயிற்சி நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

மூவின மக்களும் பயன்படுத்தக்கூடியவாறு திறந்த வெளியரங்கில் இது அமைக்கப்பட்டுள்ளது. ஆண், பெண் இரு பாலரும் இதைப் பயன்படுத்த முடியும்.

மாநகர சபையின் ஆணையாளர்,உட்பட உறுப்பினர்கள்,மற்றும் பொது மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நகர்வலம்






### ஈழமதி ஜப்பார் எழுதிய "மதி பாடும் நதிகள்"

## கவிதை நூல் அரச அதிபரிடம் கையளிப்பு

கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற எழுத்தாளர் ஈழமதி ஜப்பார் எழுதிய 'மதிபாடும் நதிகள்' எனும் கவிதை நூல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனிடம் நூலாசிரியரால் அண்மையில் கையளிக்கப்பட்டது.



பீ.எம்.கே. றஹ்மதுல்லா எனும் இயற் பெயருடைய இவர் எழுதிய இந்நூலில் கிழக்கிலங்கை மற்றும் கல்விப் புலமைமிக்கவர்களின் வரலாறுகள் என்பன கவிதைகளாக வடிக்கப்பட்டுள்ளன.

1959 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆந் திகதி பிறந்த ஈழமதி ஜப்பார் 1978 ஆம் ஆண்டு தொடக்கம் தினகரன், டெய்லிநியூஸ் பத்திரிகைகளின் நிருபராக எழுத்துத்துறைக்குள் பிரவேசித்தார். கட்டுரைகள், நாடகம், கவிதை என இவரது இலக்கியப் படைப்புக்கள் பத்திரிகை, வானொலி மற்றும் பிரசுரங்களில் தொடர்ச்சியாக வெளிவந்தன.

அட்டாளைச்சேனை அல்ஹிதாயா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியினையும், அல்அஸ்ரப் வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியினையும் கற்றார். பாடசாலைக் காலத்திலேயே கவிதைத் துறை, எழுத்துத் துறையில் ஆர்வமுள்ள இவர் மாவட்டமட்டம், மாகாணமட்டங்களில் பல பரிசில்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் ஒரு அரச பணியாளர். பிரதேச செயலகத்தில் சுமார் 34 வருடங்கள் சேவையாற்றி, 2017 இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மும்மொழியிலும் தேர்சி பெற்ற இவர் மொழி பெயர்ப்பாளராகவும் செயற்பட்டதுடன், சுமார் 17 வருடங்கள் அமைச்சரின் பிரத்தியேக உதவியாளராக பாலமுனை, அக்கரைப்பற்று, அம்பாறை, ஒலுவில், அட்டளைச்சேனை பகுதிகளில் சமூகப் பணிகளில் ஈடுபட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வட மத்திய மாகாணம்;

## முன்பள்ளி ஆசிரியர் பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாண முன்பள்ளி நிலையங்களில் கடமை புரியும் ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் வழங்கிய ஆலோசனையின் பேரில் முன் பள்ளி சிறுவர் கல்விப்பிரிவு இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள முன்பள்ளி பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளி பாடசாலைகள் அமைந்துள்ள கட்டடங்கள் போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்குத் தேவையான வேலைத் திட்டங்கள் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட வேலைத் திட்டமாக மதவச்சி, ரம்பாவ மற்றும் கெக்கிராவ ஆகிய பிரதேசங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நிலந்த ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

## புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜித் அபிவிருத்தி திட்டம் முன்னெடுப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் பர்வின் ராஜா, ரனீஸ் பதூர்தீன் ஆகியோர் புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜித் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அண்மையில் ஆரம்பித்து வைத்தனர்.

அரசாங்கத்தினால் 2022 வரவு செலவு திட்டத்தில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான வட்டார அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் புத்தளம் 5ம் வட்டார நகர சபை உறுப்பினர் பர்வின் ராஜாவினால் குறித்த மஸ்ஜித் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் மஸ்ஜித் நிர்வாகத்தினர் உள்ளிட்ட பிரதேச பொது மக்களும் கலந்து கொண்டனர்.




குவைத் நாட்டின் இஸ்லாமிக் கெயா சொசைட்டி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஹொரவப்பொத்தான அ/ நிக்கவெவ முஸ்லிம் வித்தியாலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக்கட்டிடம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அதிதிகளால் திறந்து அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக வருகை தந்த குவைத் நாட்டின் இலங்கை தூதரக பொறுப்பதிகாரி அப்துல் அஸீஸ் அல் அத்வானி, அல் ஹிமா பணிப்பாளர் அஷ்ஷைஹ் எம்.ஏ.ஏ. நூருள்ளாஹ் (நளிமீ) மற்றும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரகுமான் உள்ளிட்ட அதிதிகளை வித்தியாலய அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாத்தினர் வரவேற்று அழைத்து வருவதையும் புதிய கட்டடத்தினை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)

## ரூ. 02 இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

### இரு மாணவர்கள் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைஒன்றில்பணிபுரியும் நபர் ஒருவரின் 2 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க இரு கையடக்க தொலைபேசிகள், ஒரு றவுட்டர் மற்றும் 20 ஆயிரம் ரூபா பணம் என்பனவைகளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் மாணவர்கள் இருவரையும் அவர்களை வழிநடத்திய இளைஞன் ஒருவரையும் அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் கும்பிச்சங்குளம் சேமசிங்க மாவத்த பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இருந்தே திருட்டு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச்சம்பவத்துடன்தொடர்புடைய இரு மாணவர்களும் சிறுவர் பாதுகாப்பு நிலையத்தை சேர்ந்தவர்கள் எனவும் கைது செய்யப்பட்டுள்ள இளைஞன், அதே நிலையத்தில் பாடசாலை கல்வி முடித்து தொழில் பயிற்சியில் ஈடுபட்டு வருபவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான இளைஞன் கஞ்சா பாவனைக்கு முற்றிலும் அடிமையானவர் எனவும் இவரினாலேயே சிறுவயது இளைஞர்களை திருட்டுச் சம்பவத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் முஹம்மதின் சேவை நலன் பாராட்டு

### நிகழ்வில் பௌத்த, இஸ்லாமிய மதகுருமார்கள் பங்கேற்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

தென் மாகாண தமிழ் மொழி கல்விக்கு உரமூட்டிய ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் எம். ஜே. முகம்மதின் சேவைநலன் பாராட்டு விழாவும் அன்னார் பற்றிய மர்ஹூம் ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியர் எழுதிய நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் மீயல்லை அல் மினா மகா வித்தியாலய மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

மீயல்லை அல் மினா மகா வித்தியாலய அதிபர் ஜனாப் எம். வை. எம். நவாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் வரவேற்புரையை ஜனாப் எம்.என்.எம். ஆசிக் நிகழ்த்தியதோடு நூல் விமர்சன உரையை ஆசிரிய ஆலோசகர் ஜனாப் எம். எஸ்.எம். ஹிஷாம் நிகழ்த்தினார்.




முலட்டியன வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.டீ.எம். ஆகில் உரையாற்றும் போது, மறைந்த கல்விப்பணிப்பாளர் முஹம்மத் அவரது சேவைக்காலத்தில் ஆற்றிய மகத்தான பணிகளை நினைவூட்டினார். புன்முறுவல் பூத்தவண்ணம் அமைதியான போக்கில் தமது கடமைகளை மனம் தளராது செவ்வனே நிறைவேற்றியவர் என புகழாரம் சூட்டினார். நன்றியுரையை அவரது புதல்வி எம். லமீமா நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் பௌத்த, இஸ்லாமிய, மதகுருமார்கள், பாடசாலை அதிபர்கள், கல்விமான்கள், பெற்றோர்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். மாணவர்களது கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 1998/1999ஆம் ஆண்டின் ஆசிரிய பயிலுனர்களின் ஒன்றுகூடல்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் 1998/ 1999 வருடங்களில் ஆசிரியர் பயிலுனர்களாக கல்விகற்ற ஆசிரியர்களின் ஒன்றுகூடல் பொத்துவில் அறுகம்பை ஹாங்லூஸ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வினை பொத்துவில் 'ஆசிரிய நண்பர்கள்' ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் கொழும்பு, களுத்துறை, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, பதுளை, மொனராகலை, அநுராதபுரம் மற்றும் வெலிமடை உட்பட நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 22 வருடங்களின் பின்பு ஆசிரிய நண்பர்கள் ஒன்று கூடி தங்களது பழைய நினைவுகளை ஞாபகமூட்டி மகிழ்ந்தனர்.



வளமான எதிர்கால கல்வித்துறை அபிவிருத்தியில் ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அந்தவகையில் அன்று அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியினை பெற்று வெளியேறிய பலர் இன்று நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கல்வி அதிகாரிகளாக, அதிபர்களாக, ஆசிரிய ஆலோசகர்களாக மற்றும் ஆசிரியர்களாகவும் திகழ்ந்து நாட்டின் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பாரியதொரு பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

இந்த நிகழ்வு 1998/1999ஆம் வருட அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் பொருளாளர் சுஹைர் ஏ காதரின் வழிநடாத்தலில் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டக்காரர்களினால்; அநுராதபுரம் மாவட்ட ஆளும் தரப்பு அமைச்சர்களின் வீடுகளுக்கு சேதம்

### பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அநு. உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அரசாங்கத்தின் செயற்பாட்டினை கண்டித்து நாளுக்கு நாள் ஆர்பாட்டங்கள் வெடித்து வரும் நிலையில் அரச தரப்பை பிரதிநிதித்துவப் படுத்தும் அநுராதபுரத்திலுள்ள காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரேசன, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க மற்றும் சன்ன ஜயசுமன, சேமசிங்க ஆகியோரது வீடுகளுக்கும் அநுராதபுரம் மாநகர மேயர் சோமதாசவின் வீட்டுக்கும் (04) நகரில் குவிந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் சேதம் விளைவிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதை அடுத்து அநுராதபுரம் பகுதிக்கு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

அதேவேளை, அநுராதபுரம் விமான நிலைய வீதியின் இசுறுபுர பகுதியில் அமைந்துள்ள ஞானக்காவின் வீட்டுக்கும் குறித்த திகதி இரவு அதிகளவிலான ஆர்ப்பாட்டக்காரர்கள் உட்புகுந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

திடீரென அப்பகுதிக்குள் குவிந்த ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்துவதற்கு ஞானக்கா எனும் பெண்ணுடைய வீட்டில் கடமையிலிருந்த பொலிஸாரால் முடியாமல் போனதால் அப்பகுதிக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் அப்பெண்ணின் வீட்டுக்கும் தேவாலயத்திற்கும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதை அடுத்து அநுராதபுரம் பகுதிக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் வேறு எந்த அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லையெனவும் வழமை போன்று மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதுடன் அமைதியான நிலை காணப்படுவதாகவும் அநுராதபுரம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பெரேரா மேலும் தெரிவித்தார்.





சீன இலங்கை இராஜதந்திர உறவு 65 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு முஸ்லிம் உரிமைகள் முன்னணியின் வேண்டுகோளின் பேரில் கொழும்பில் உள்ள சீனத் தூதுவரின் ஏற்பாட்டில் கொழும்பு பிரதேச 650 முஸ்லிம் குடும்பங்களுக்கு ரமழானை முன்னிட்டு உலர் உணவு பொதிகள் (30) வழங்கி வைக்கப்பட்டன. மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் உரிமைகள் முன்னணியின் செயலாளர் ரூமி ஆமித் மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஐ.ஏ. கலீலுல் ரஹ்மான் மற்றும் முசம்மில் ஆகியோர் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

### புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



மே.மா./களு/ அல் பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் ஆண்கள் கல்லூரி மாணவன் மொஹமட் யூஸுப் ரிஸான் இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் பேருவளை, மருதானையைச் சேர்ந்த மொஹமட் ரிஸான், பாத்திமா ஜெஸ்மினா தம்பதியினரின் புதல்வராவார்.



பேருவளை, அல் பாஸியதுல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை மாணவன் மொஹமட் 153 புள்ளிகளைப் பெற்று இம்முறை நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவர் மொஹமட் ரம்ஸான், பாத்திமா பர்ஸானா தம்பதியினரின் புதல்வர் ஆவார்.

தினகரன்
THINAKARAN தினகரன்

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | KNPIWS திட்டத்தின் கீழ் உக்கல - தல்கஹகந்த கிராமிய நீர் வழங்கல் திட்டத்தில் முற்றவெளிகளுக்கு குழாயிடுதல் மற்றும் நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **KNPIWSP/WORK/PC-01/2022-16** | 20,000/- + VAT ** | ரூபா 300,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C3 அல்லது C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 56.0 மில்லியன் | கண்டி வடக்கு பாத்ததும்பர ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tele:0812492390<br>Fax:0812492286 | 2022/05/11 பி.ப. 2.00 |
| 02 | நகர நீர்க்கோபுர வேலைத்தளத்தில் திறந்த களஞ்சியசாலையை நிர்மாணித்தல் மற்றும் நிலச்சீராக்க வேலைகள், பொறுப்பாளர் விடுதியின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/RENOVATION/ VAVU/2021/023** | 12,500/- + VAT ** | ரூபா 122,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 12.15 மில்லியன் | பிஓறி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2225719/ 024-2227340<br>Fax: 024-2225088/ 024-2227341 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 03 | ரன்ன நீர் வழங்கல் திட்டத்தில் வால்வு அறையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல : **RSC(S)/P&C/C/VALVE CHA/ RANNA/RH/2022-14** | 6,000/- + VAT ** | ரூபா 87,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 8.65 மில்லியன் | பிஓறி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 04 | கிரிந்திஓய நீர் வழங்கல் திட்டத்திற்கு வால்வு அறையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/C/VALVE CHA./ K'OYA/RH/2022-34** | 4,000/- + VAT ** | ரூபா 50,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு | 4.94 மில்லியன் | பிஓறி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 05 | மன்னம்பிட்டிய நீர் வழங்கல் திட்டம் - வடிகட்டி ஊடகத்திற்கு மெதுவான மணல் வடிகட்டியை வழங்குதல் மற்றும் அமைவிடத்தில் வைத்தல்<br>ஒப்பந்த இல: **O&M/NC/DGM/SAND/MAN/2021/132** | 6,000/- + VAT ** | ரூபா 95,450/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 6.98 மில்லியன் | பிஓறி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele : 025-2235993<br>Fax: 025-2225609 | 2022/04/20 பி.ப. 2.00 |
| | 2021-12-29ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. எட்டாம்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின் பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஒப்பந்த இல: **NWSD/U/CP/A4-33/GOSL/2021/01 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-04-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 06 | 50,000.00 எண்ணிக்கையான Volumetric Displacement Type 15mm (1/2'') வீட்டு நீர்மானிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல். (இரட்டைக் கடிதவுறை - ஒற்றைக் கட்டம்)<br>ஒப்பந்த இல : **NWSDB/CP/M&E/WM/15/2021/ 05/GOSL** | 60,000/- + VAT ** | ரூபா 4.0 மில்லியன் மற்றும் 19,550.00 ரூபாவை தேநீவவ சபைக்கு மாதிரி பரீட்சித்தல் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். | 50,000 எண்ணிக்கையான volumetric displacement type 15mm விட்டமுள்ள வீட்டு நீர்மானிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 2022/05/05 மு.ப. 10.00 |
| 07 | தென் மேற்கு இலங்கை நகரங்களுக்கு சாக்கடை செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு - துப்புரவேற்பாடு மற்றும் நீரியல் பூர்வாங்க வேலைகளுக்கு உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல் (SHIFT -1)<br>ஒப்பந்த இல: **NWSDB/AFD/SHIFT-1/GOODS/ PACKAGE-2/2020-02** | 60,000/- + VAT **<br>Or USD 300 + VAT | ரூபா 6.675 மில்லியன் (சகல லொட்களுக்கும்) அல்லது தனியான விலைப் பட்டியல்களுக்கு<br>லொட் இல. (இல. ரூபா)<br>1A 367,000<br>1B 3,600,000<br>1C 215,000<br>1D 1,557,000<br>1E 140,000<br>1F 120,000<br>2 444,000<br>3 232,000 | ஆவணத்தின் பிரகாரம் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 190.57 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 2022/06/01 மு.ப. 10.00 |
| 08 | KNPIWS திட்டத்தின் கீழ் கிரகடுவ கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கு நீர்ப் பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **KNPIWSP/S&I/PC-01/2021-121** | 12,500/- + VAT ** | ரூபா 200,000/- | அங்கீகரிக்கப்பட்ட பம்பி உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் அல்லது<br>CIDA நிறுவனத்தின் M&E<br>தரப் பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ; | | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tele:0812492390<br>Fax:0812492286<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022 மே 4ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அலுவலகத்தில் இடம்பெறும். (கேள்வி முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என கட்டாயம் இல்லை) | 2022/05/25 பி.ப. 2.00 |
| 09 | வல்வெட்டித்துறை நீர் வழங்கல் திட்டத்திற்கு Submersible பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் கையளித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/PUMP/ VALVETI/2021/029** | 6,000/- + VAT ** | ரூபா 159,039/- | நீர்ப் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.6 மில்லியன் | பிஓறி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/024-2227341 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 10 | KNPIWS திட்டத்தின் கீழ் திட்டத்திற்கு Three Phase LV (400V) BUS Coupler மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **KNPIWSP/S&I/PC-03/2020-93** | 12,500/- + VAT ** | ரூபா 140,000/- | பெனல் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் / விநியோகஸ்தர்கள் அல்லது CIDA நிறுவனத்தின் E&M தரம் 2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.6 மில்லியன் | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tele:0812492390<br>Fax:0812492286 | 2022/05/05 பி.ப. 2.00 |
| | 2022-03-30ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. அக்கரைப்பற்று பிராந்தியத்திலுள்ள கல்முனை நீர் வழங்கல் திட்டத்தின் தலவட்டுவான பம்பி இல்லத்திற்கு பம்பிகள், மின்சார பெனல்கள், வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல : **NWSDB/RSC(E)/CP/A3-66/GOSL/2021/58 -** இந்தக் கேள்வி இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | 2022-03-16ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. ஹிக்கடுவ PS1&PS2 பம்பி இல்லங்களுக்கு சாக்கடை பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/S/ SEWERAGEPUMPS/ HIKKADUWAPS1 & PS2/RH/2021- 37(R) -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-04-20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் / கட்டிடங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 11 | காலி பிராந்தியத்திற்கு (O&M) முகாமையாளர் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு கட்டிடமொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/GALLE(O&M)/ RENTINGBUILDING/ O&M/2021-104** | 6000/- + VAT ** | ரூபா 96,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 2022/04/27 மு.ப. 10.00 |
| 12 | பிஓறி (தென்), திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/HIRING/VAN/ PLANNING&CO-ORDINATION/O&M/2021-110R** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓறி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 13 | கோட்டேகொட நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/KOTTEGODA/ HIRING/CREW CAB/ O&M/2021-93R** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓறி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 14 | பொபே - பொத்தல நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/HIRING/CREW CAB/BOPE-PODDALA/ O&M/2021-171R** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓறி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 2022/04/27 பி.ப. 2.00 |
| 15 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு) அலுவலகம் - பொபே பொத்தல நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல் (புதிய சேவை இணைப்புகளை வழங்கும் திட்டத்திற்கு)<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/HIRING/T.WHEELER/ BOPE-PODDALA/O&M/2021-190R** | 500/- + VAT | ரூபா 2,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓறி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 2022/04/27 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிரதான செயலகம் - சப்ரகமுவ மாகாண சபை

## வாகன குழும காப்புறுதி - 2022/2023

சப்ரகமுவ மாகாண பிரதான செயலக பெறுகைக் குழுத் தலைவரினால் மாகாண சபையின் 269 வாகனங்களுக்கு 2022-06-01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கான குழும காப்புறுதியின் கீழ் முழுமையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவைப் பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2022-04-06ஆம் திகதி முதல் 2022-05-04ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மாகாண திறைசேரியில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது 2,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களுடன் 2022-05-05ஆம் திகதி முதல் 2022-06-28ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் 70,000.00 ரூபா பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியின் பதிவு செய்யப்பட்ட வங்கியிலிருந்து ''பிரதான செயலாளர், சப்ரகமுவ மாகாண சபை'' எனும் பெற்றுக்கொண்ட விலைமனுப் பிணை முறியொன்றின் மூலம் அல்லது குறித்த தொகையை மாகாண திறைசேரிக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் ''வாகன குழும காப்புறுதி - 2022/2023'' எனக் காரணம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2022-05-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் மாகாண திறைசேரி, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாகன குழும காப்புறுதி - 2022/2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

(மேலதிக விபரங்களுக்கு: 045-2222893 / 045-2231224)

**சுனில் ஜயலத்,**
**பிரதான செயலாளர்,**
**தலைவர், பிரதான செயலக பெறுகைக் குழு,**
**சப்ரகமுவ மாகாண சபை.**

**2022-04-06.**

## விசேட அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல.82/1, காலி வீதி, தெஹிவளை, வடக்கு மற்றும் தற்போது VIA DELL, OLMO 10, SAN CASCIANO IN VAL DI PESA, FIRENZE, ITALY இல் வசிக்கும் ஹிரன்தா மனோரி - ஜயசிங்ஹவினால் 2015.11.30 ஆம் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட பத்தரமுல்ல பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 2016.01.26ஆம் திகதியுடன் பதிவு செய்யப்பட்ட தினப்புத்தக இல.157,63 ஆம் பிரிவில் 985 எனும் பக்கத்தில் பதிவு செய்துள்ள விசேட அற்றோணி தத்துவத்தின் மூலம் இல.82/1, காலி வீதி, தெஹிவளை, வடக்கில் வசிக்கும் பர்சி வர்ணகுலசூரிய எனும் எனக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை 2022.04.06 ஆம் திகதி முதல் இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**பர்சி வர்ணகுலசூரிய.**

## பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்

### 1931 இல 19 விஹார தேவாலகம் சட்டவாக்கத்தின் 8 பிரிவின் கீழ் பஸ்நாயக்க நிலமே ஒருவரைத் தேர்ந்தெடுத்தல்

கண்டி மாவட்டத்தின் பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள பஸ்கம ஸ்ரீ நாத தேவாலயத்திற்கு பஸ்நாயக்க நிலமே பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான குறித்த கூட்டம் கீழ் குறிப்பிடுமாறு நடத்தப்படும்.

| தேவாலயத்தின் பெயர் | கூட்டம் நடைபெறும் தினம் மற்றும் நேரம் | கூட்டம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|
| பஸ்கம ஸ்ரீ நாத தேவாலயம் | 2022 மே 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.9.30 இற்கு | கண்டி மாவட்ட செயலககூட்ட மண்டபம் |

02. குறித்த தேவாலயத்தின் பஸ்நாயக நிலமே பதவிக்கு விண்ணப்பிப்போர் குறித்த நேரத்திற்கு அக் கூட்டத்திற்கு சமுகமளித்திருப்பதுடன், பௌத்த விகாரை தேவாலகம் சட்டவாக்கத்தின் 14 மற்றும் 40 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்படுமாறு தகைமைகள் தம்மிடம் இருப்பதற்கான சான்றுகளாக சத்தியப்பிரமாணப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். குறித்த சத்தியப்பிரமாண பத்திரத்தை இவ் அலுவலகத்தில் அல்லது பௌத்த மத அலுவல்கள் பற்றிய கண்டி, இரத்தினபுரி, குருநாகல் பிரதேச அலுவலகங்களிலிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதி செய்வதற்கு பௌத்தமத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வேறு சான்றுகள் தேவைப்படின் அவ்வாறு தேவைப்படும் சான்றுகளைச் சமர்ப்பிக்கவும் தயாராக இருத்தல் வேண்டும்.

04. பஸ்நாயக்க நிலமே பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரால் மேற்படி பதவிக்கு வேலையை ஒப்படைப்பதற்கு முன் காசாக பிணையமொன்றை வைத்தல் வேண்டும்.

**சுனந்த காரியப்பெரும,**
**பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம்,**
**2022.03.22 ஆம் திகதி பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்.**

## தங்க நகைகளின் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளான வரையறுக்கப்பட்ட வத்தளை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் போபிட்டிய, ஹெத்தளை, குருகுலாவ, எலகந்த, வத்தளை, மத்துமகல, மஹபாகே, வெலிசர, உஸ்வெட்ட கய்யாவ, தொமின்கோ குருந்துவத்த, மாபோல, கெரவலப்பிட்டிய, காலசந்தி, அவரகொட்டுவ, தேலதுர ஆகிய கிராமிய வங்கி கிளைகளில் 2018.07.01 முதல் 2020.06.30 வரை அடகு வைக்கப்பட்டு 2022.05.05 வரை மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தி புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் 2022 மே மாதம் 06,07 ஆகிய இரு தினங்களில் மு.ப.10.00 முதல் வ/ப வத்தளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**
**வ/ப வத்தளை ப.நோ.கூ.சங்கம்**
**இல-380, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை**
**தொ.பே.இலக்கம் - 0112930224/0112933224**

## ருஹுணு பல்கலைக்கழகம்

### 2022/2023 ஆம் ஆண்டிற்காக போட்டோப் பிரதி மற்றும் அச்சு விடயங்கள் சேவையை வழங்குவதற்கான பெறுகைக்கோரல்

ருஹுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் கல்வித் தேவைப்பாடுகளுக்கான போட்டோப்பிரதி சேவையை நடத்திச் செல்வதற்காக போட்டோப்பிரதி சேவை வழங்கும் சேவை வழங்குநர்களிடமிருந்து 2022.04.06 முதல் பெறுகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். போட்டோப்பிரதி சேவைகளை வழங்க வேண்டிய இடங்கள் கீழ்க்காணுமாறு அமையும்.

01. பிரதான நூலகம், வெல்லமடம, மாத்தறை
02. விஞ்ஞான பீடம், வெல்லமடம, மாத்தறை
03. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், வெல்லமடம, மாத்தறை
04. கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பபீடம், வெல்லமடம, மாத்தறை
05. விவசாய விஞ்ஞான பீடம், மாபலான, கப்புறுபிட்டிய, மாத்தறை
06. பொறியியல் பீடம், பிரதான நூலகம், ஹப்புகல, காலி.
07. பொறியியல் பீடம், மாணவர் நிலையம், ஹப்புகல, காலி.
08. விஞ்ஞான பீடம், கராபிட்டிய, காலி

பெறுகை மாதிரிப் பத்திரங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ.250/ கட்டணத்தை ருஹுணு பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மாணவர் விவகாரப்பிரிவின் உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான நேரத்திற்குள் மாணவர் விவகாரப் பிரிவிற்கு வருகைதந்து 2022.04.25 வரை இப்பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைப் பத்திரங்களைப் பொறியிட்டு குறித்த தினத்திற்கு முன்பு தலைவர்/பல்கலைக்கழக பெறுகைக்குழு, ருஹுணு பல்கலைக்கழகம், மாத்தறை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன் கொண்டு வந்து ஒப்படைப்பதாயின், பதிவாளர் பணிமனையில் உள்ள இல.01, கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் போட்டோப்பிரதி மற்றும் அச்சு விடய சேவைகளை வழங்குவதற்கான பெறுகை கோரல் என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2022.04.26 ஆம் திகதி மு.ப.10.00 வரை பெறுகைப் பத்திரங்கள் ஏற்கப்படுவதுடன், அன்றே அந்த நேரம் முடிவடைந்தவுடன் பெறுகைப் பத்திரங்கள் திறக்கப்படும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் பெறுகைப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்/பல்கலைக்கழக பெறுகைக்குழு**
**ருஹுணு பல்கலைக்கழகம்.**

# கேள்வி அழைப்பு

## சுகாதார அமைச்சு

## மாகாண பொது வைத்தியசாலை - பதுளை

பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் காணப்படும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | வழங்கல் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|
| | Medical Equipment | | | | |
| 01 | PGHB/ FC/01/22 | Supply & Installation of Orthopedic Power Drill Set, Battery Operated | 01 | 2200.00 | 120,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறை (NCB) அடிப்படையில் கேள்விகள் கோரப்படும்.
03. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரைத் தொடர்புகொள்வதன் மூலம் (நீடிப்பு 1103) அல்லது பின்வரும் வைத்தியசாலையின் இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. தகைமையுடைய கேள்விதாரர்கள் ஒரு கேள்விக்காக மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையும் மற்றும் சனிக்கிழமை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரையும் வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் செலுத்தி 2022-04-06ஆம் திகதி முதல் 2022-04-27ஆம் திகதி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் கடிதத்துடன் கம்பனிப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2022-04-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரில் வந்து கையளிக்கவோ முடியும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
07. இது சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழுவுக்குரியது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பொது வைத்தியசாலை, பதுளை.**

**தொலைபேசி இல. 055-2222261** **தொலைநகல்: 055-2231205**
**மின்னஞ்சல்: info@badullapgh.org** **இணையதளம்: www.badullapgh.org**

**2022-04-06**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



119

**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

62-6564 Mitsubishi Rosa Bus, 1991, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே 0714 542958. 024655

## සතොස பெறுகை அறிவித்தல்

வர்த்தக அமைச்சு

### லங்கா சதொச லிமிடட் (LSL) நிறுவனத்திற்கு வெப்பக் காகிதங்களை (Thermal Papers) வழங்கல்

விலைமனு இலக்கம் : **LSL/PRO/05/252/POS Machine Paper Rolls/2021**

**தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல**

லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு 06 மாத காலத்திற்கு POS **இயந்திரத்திற்காக** அட்டவணை அச்சிடப்படும் காகித சுருள் வழங்குவதற்காக 'உள்நாட்டு வழங்குனர்கள், உள்நாட்டு முகவர்கள், அவர்களின் அதிகாரம் பெற்ற உள்நாட்டு பிரிநிதிகள், இறக்குமதியாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது

தேவைகள்:

| உருப்படி விபரம் | அளவு |
|---|---|
| POS இயந்திரத்திற்கு அட்டவணை அச்சிடப்படும் காகித சுருள்கள் (POS Machine Paper Rolls) | 250,000 |

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆங்கில மொழியிலான குறித்த முழுமையான ஆவணத்தை, **ரூபா 3,000/= மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை** செலுத்தி **2022 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் 2022 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி வரையான காலத்தில்,** இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல், அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022 ஏப்ரல் 19 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும்.

முன்வைக்கப்படும் விலைமனுக்கள் **2022 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச செயலாளர் நாயக அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடெட்டிற்கு வெப்ப காகிதங்கள் வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் இலங்கையில் இயங்கும் **அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து மேற்கொள்ளப்படும் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படுகின்ற) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.** குறித்த பெறுமதி விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. வெற்றிகரமான விலைமனுதாரர்கள் மூலம் (பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர்த்து) **பதிவுக் கட்டணமாக ரூபா 5,000/- தொகை (மீளளிக்கப்படாதது)** செலுத்த வேண்டும் என்பதோடு ஒப்பந்தப் **பெறுமதியில் 5% தொகையை செயல்திறன் பிணையாக** (மீளளிக்கப்படும்) செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (திலினி) 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழுதலைவர் வசமானதாகும்.**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

# விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் 020/T/2022**

## கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஒரு வருடகாலத்துக்கு தேவைப்படுகின்ற TOWEL DISPENSERS (230 MM. X 230 MM.) இற்காக MULTIFOLD PAPER TOWEL 109,500 பொதிகளை வழங்குதல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால், ஒரு வருடகாலத்துக்கு தேவைப்படுகின்ற TOWEL DISPENSERS (230 MM. X 230 MM.) இற்காக MULTIFOLD PAPER TOWEL 109,500 பொதிகளை வழங்குவதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைகோப்பு திருப்பித் தரப்படாத ரூபா நான்காயிரம் (4,000.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2022.04.06 ஆந் திகதி முதல் 2022.04.25 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2022.04.26 ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும். விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா இரண்டு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எண்ணூறு (ரூபா 262,800.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற வேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264103 / 011-2264104 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை

### காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் காணி மீட்புக்காக மேலதிக சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவைகளுக்காக முன்மொழிவுகளை அழைத்தல்

1. இலங்கை அரசாங்கம் காலி துறைமுகத்தை புதிய அலைதடுப்பு, கால்வாய் மற்றும் காணி மீட்பு என்பவற்றை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை மேற்படுத்தி சுற்றுலா சார்ந்த துறைமுகமாக அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளது. இலங்கைத் துறைமுக அதிகார சபையானது துறைமுக உட்கட்டமைப்புக்குத் தேவையான உரிய அனுமதியைப் பெறுவதற்கு மேலதிகமாக வடிவமைப்பு வேலைகளை ஏற்கனவே நிறைவு செய்துள்ளது. எவ்வாறாயினும் காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு காணி மீட்புப் பகுதிக்கான அபிவிருத்தி அனுமதியைப் பெறுவது அவசியமாகும். அதன்படி, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர், காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் காணி மீட்பு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக ஒரு மேலதிகச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் பொறியியல் ஆய்வை மேற்கொள்வதற்கு புகழ்பெற்ற ஆலோசனை நிறுவனங்கள் அல்லது கூட்டமைப்பிலிருந்து முன்மொழிவுகளை இதன் மூலம் அழைக்கிறார்.

2. ஆர்வமுள்ள தரப்பினர் 2022 ஏப்ரல் 06ஆம் திகதி முதல் 2022 மே 04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். ஆலோசகர்கள் மேலதிக விபரங்கள் மற்றும் எழுத்துமூலமான தெளிவுபடுத்தல்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி),**
**திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு,**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை,**
**45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு 1, இலங்கை.**
**தொலைபேசி இல. +94(0) 112325575**
**தொலைநகல் இல. +94(0) 112323055**
**மின்னஞ்சல் முகவரி: cepd@slpa.lk**

3. ஏப்ரல் 06ஆம் திகதி முதல் 2022 மே 04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரையில் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மற்றும் பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆலோசருக்கான அறிவுரைகள், ஒப்பந்த நிபந்தனைகள், விதிமுறைக் குறிப்புகள், தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளுக்கான நிலையான படிவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. வளமுள்ள ஆலோசர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளின் பிரகாரம் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளை ''காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் காணி மீட்புக்காக மேலதிக சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவைகளுக்காக முன்மொழிவுகளை அழைத்தல்'' எனக் குறிப்பிட்டு 2022 மே 6ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு) வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் தொழில்நுட்ப முன்மொழிவுகளைக் கொண்ட கடிதவுறை உடனடியாகத் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.

6. ஆலோசகர்களுக்கு ஏற்படும் முன்மொழிவுகளைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பில் ஏற்படும் செலவுகள் மற்றும் கிரயம் மற்றும் தள விஜயம் தொடர்பான செலவுகள் மற்றும் கிரயம் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் இலங்கைத் துறைமுக அதிகார சபை பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**இலங்கைத் துறைமுக அதிகாரசபை,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

---

தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கை மேம்பாடு மற்றும் சார்ந்த கைத்தொழில் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

## வழங்குநர்களைப் பதிவுசெய்தல் – 2022

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் தெங்கு சார்ந்த உற்பத்தி இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் மூலப்பொருட்கள் வழங்குநர்களை துரிதமாக பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்காக விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**A. தவாஷி பிரஷ் உற்பத்தி**
1. தும்பு முருக்கும் உபகரணம்
2. தும்பு வெட்டும் உபகரணம்
3. கம்பி வெட்டும் உபகரணம்
4. தும்பு வெட்டும் உபகரணம் (மோட்டார் சகிதம்)
5. ட்ரிமர் இயந்திர உபகரணம்

**B. விளக்குமாறு மற்றும் தும்புத்தடி உற்பத்தி**
1. பல்நோக்கு விளக்குமாறு உற்பத்தி இயந்திரம்
2. விளக்குமாறு/தும்புத்தடி பிடியை சீராக்கும் இயந்திரம்
3. ஈர்க்கில் சுத்திகரிக்கும் உபகரணம்

**C. விளக்குமாறு உற்பத்தி உபகரண தொகுதி**
1. விளக்குமாறு விரித்தல் அச்சு - பலகை 3'X2'
2. தச்சு சுத்தியல்
3. கொடுவா கத்தி
4. இரும்பு வெட்டும் வாள்
5. தகடு வெட்டும் கத்தரிக்கோல்
6. கட்டர் அச்சு

**D. கை கயிறு உற்பத்தி**
1. மோட்டருடன் கை கயிறு மெஷின்
2. கயிறு திரிக்கும் உபகரணம் (கையால் செயற்படுத்தக் கூடியது)

**E. பாதுகாப்பாக தேங்காய் பறிக்கும் உபகரண தொகுதி**
1. (4 feetX10pcs) 40 feet - rods Heavy Duty Pole Set 7 Kg (Max) this set Include:
   5 Nos.of Heavy Poles (1 1/2")
   3 Nos.of Medium Poles (1 1/4")
   2 Nos.of Small Poles (1")
   (It is with travelling Bag I)
   Safety Helmat (பாதுகாப்பு தலைக்கவசம்)
   Safety Boots (பாதுகாப்பு பூட்)
   Safety Goggles (பாதுகாப்பு கொகல்)

**F. கூர் பாபிஸ் உற்பத்தி**
1. கூர் பாபிஸ் அச்சு
2. இறுக்கும் அச்சு

**G. ஜியோ டெக்ஸ்டைல் உற்பத்தி**
1. ஜியோ டெக்ஸ்டைல் படிவம்
2. பொபின் தூண்
3. பொபின் சுற்றும் இயந்திரம்

**H. தவாஷி சார்ந்த அலங்கார உற்பத்தி**
1. கம்பிவலை பிரேம் அச்சு
2. பலகை சுத்தியல் (ஒரு பக்கம் இரும்பு கவர் உடன்)
3. பெரிய கட்டர் குறடு (மேசையில் பொருத்தக்கூடிய)
4. சிறிய கட்டர் குறடு
5. சிறு உள் குறடு

**I. தென்னம்பானி கருப்பட்டி உற்பத்தி**
1. பூ வெட்டும் கத்திரிகள்
2. கை கத்தி
3. பூ பறிக்கும் கருவி
4. மன்னம்பெட்டி
5. வெள்ளை இரும்பு அலுமினியம் (50 லீட்டர்)
6. அலுமினியம் பெரிய தாச்சு (தடிப்பு, 03 அடி)
7. வெள்ளை இரும்பு கரண்டி
8. பிளாஸ்டிக் பெரல் (210 லீட்டர்)
9. வெப்பமானி

**J. தேங்காய் எண்ணெய் கைத்தொழில்**
1. தேங்காய் உலர்த்தும் இயந்திரம்
2. எண்ணெய் வற்ற வைத்தல்/ வடிவத்தல்
3. தேங்காய் வடிகட்டல் இயந்திரம்
4. தேங்காய் உள்ளீடு வெட்டும் இயந்திரம்

**K. தென்னம் சிரட்டை சார்ந்த அலங்காரப் பொருட்கள் உற்பத்தி**
01. பென்ச் கிரைன்டர் (Bench Grinder) (வேலைத்தள மேசை மேல் வைக்கக்கூடிய அறைத்தல் இயந்திரம்) 3/4 (hp) குதிரைவலு - சுற்றளவு - 08 அங்குலம்
02. பென்ச் டிரில் (Table Drill) 3/4 (hp) குதிரைவலு 16 mm
03. இரும்பு வெட்டும் வாள்கள்
04. பெப்சோ வாள் - உடன்பாட்டில் செயற்படும்
05. பெப்சோ பிளெட்செட் 2 mm (பெக்கட்)
06. பென்ச் டிரில் (bench drill) 13 mm
07. 06 அங்குல கூரான குறடு
08. 06 அங்குல துணி சக்கரம்
09. ஹைவின் பிளேட்
10. காவின் டூல் தொகுதி
11. அதிவேக கை துளையிடும் இயந்திரம் (High Speed Hand Drill)

**L. தேங்காய் மட்டை சார்ந்த கைத்தொழில்**
1. தேங்காய் மட்டை துண்டாக்கும் இயந்திரம்
2. டாபொலின் ஷீட் (40X40 சதுர அடி)

**M. பட்டைசார்ந்த உற்பத்திகள்**
1. பட்டை உற்பத்தியில் பாவிக்கப்படும் தையல் மெஷீன்

**N. மூலப்பொருட்கள்**
1. சீவப்பட்ட பிரிஸ்டல் தும்பு
2. கல்வனையிஸ் கம்பி
3. கலப்பு தும்பு
4. விளக்குமாறு/தும்புத்தடி பிடி
5. ஈர்க்கிள்
6. டின் ஷீட்
7. விளக்குமாறு வளையல்
8. பிளாஸ்டிக் கெப் மற்றும் பட்டி
9. இரும்பு ஆணி
10. கள்ளு

01. விண்ணப்பங்கள் மற்றும் விபரம் பத்திரங்களை 2022.04.05ம் திகதி முதல் 2022.04.17 வரை www.cda.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்வதன் மூலம் அல்லது கீழ்க்காணும் பிரதேச அலுவலகங்களில் அல்லது நாராஹேன்பிட்ட அல்லது கோட்டை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| பிரதேச அலுவல கங்கள் | முகவரி | நிலைய பொறுப்பு அதிகாரி | தொலை பேசி இலக்கம் |
|---|---|---|---|
| குருநாகல் | காகில்ஸ் புட்சிட்டி கட்டிடம், 02ம், மாடி மல்கடுவாவ, குருநாகல் | ஆர்.ஏ.எல்.டி. ரணசிங்ஹ | 0769901035 |
| புத்தளம் | பம்பல, காக்கப்பள்ளி | எச்.ஆ.ஏ. சந்தன | 0769901033 |
| காலி | தெங்கு பயிர்ச்செய்கைச் சபை அக்மீமன வீதி, லபுதுவ, காலி | டி.ஏ.மாது வகே | 0769901037 |
| மாத்தறை | தெங்கு பயிர்ச்செய்கை சபை, 331/9, அநகாரிக தர்மபால மாவத்தை, நூபே, மாத்தறை | டி.ஏ.மாது வகே | 0769901037 |
| துன் கன்னாவ | தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம், கொட்ட அம்பகஹ வீதி, தம்போவ, நாத்தாண்டிய | எச்.எம். சந்த ருவன் பண்டார நாயக்க | 071-2534717 |

02. மீளளிக்கப்படாத ரூ.1000.00 தொகையை இலங்கை வங்கியின் நுகேகொடை கிளையின் இல.228042 எனும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பெயருக்கு உள்ள கணக்கிற்கு அல்லது மக்கள் வங்கி நாராஹேன்பிடட கிளையில் உள்ள இலக்கம் 119100160007416 எனும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் உள்ள கணக்கில் வரவு வைத்து வங்கி மூலம் வழங்கப்படும் வைப்பு பத்திரத்துடன் விண்ணப்பத்தை, இல.54, நாவல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அருகில் உள்ள பிரதேச அலுவலகத்திற்கு 2022.04.18ஆம் திகதிக்கு முன் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

03. ஒரு உருப்படிக்கு மேற்பட்ட உருப்படிகள் எண்ணிக்கையில் பதிவு செய்வதாயின் ஒவ்வொரு உருப்படிக்கும் விண்ணப்பங்களை வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. ஒரு உருப்படி அல்லது பல உருப்படிகளுக்கும் பதிவு செய்திடினும் பதிவுக் கட்டணம் ரூ.1000/- ஆகும்.

05. விண்ணப்பங்களை 2022.04.18 திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022" என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை**
**இல.54, நாவல வீதி, நாராஹேன்பிட்டி,**
**கொழும்பு - 05**

---

## பொது அறிவித்தல்

### வலகம்பா பலசக்தி (பிரைவட்) லிமிட்டட் (PV 64736) உடன் விதுலங்கா பிஎல்சி (பிரைவட்) லிமிட்டட்டின் (PQ 83) ஒன்றிணைப்பு

244 (1)ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரினால் வழங்கப்பட்ட ஒன்றிணைப்பு சான்றிதழின் பிரகாரம் வலகம்பா பலசக்தி (பிரைவட்) லிமிட்டட் விதுலங்கா பிஎல்சி லிமிட்டட்டுடன் 2022 ஜனவரி 01ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் ஒன்றிணைக்கப்படுகின்றது என்பதுடன் அது விதுலங்கா பிஎல்சி என தொடர்ந்து இயங்கும் என 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 244(3)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு முகவரியானது நிலை 4, இல. 278, எக்ஸஸ் டவர், யூனியன் பிளேஸ், கொழும்பு 02 ஆகும்.

**விதுலங்கா பிஎல்சி பணிப்பாளர் சபையின் கட்டளை பிரகாரம்,**
**மெனேஜர்ஸ் அன்ட் செகரட்டரிஸ் (பிரைவட்) லிமிட்டட்,**
**கம்பனி செயலாளர்கள்,**
**இல. 08, டிக்கல் வீதி, கொழும்பு-08.**

**2022 ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி.**

---

பெருந்தோட்ட அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கான விலைமனுக்கோரல்

**SLSPC/PL/IEEREPORT/T-87/2022**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கெலேபொக்க தோட்டத்தில் அமைந்துள்ள காணித் துண்டில் பலகை மரங்கள் கிட்டத்தட்ட 6,800 அளவு அகற்றுவதற்கு சுற்றாடல் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான Initial Environment Examination Report (I.E.E.) அறிக்கையை தயாரிப்பதற்கு தகைமையுள்ள நிறுவனங்கள்/ தனி நபர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்திற்கு மீளளிக்கப்படாத ரூ. 2,000/- தொகையைச் செலுத்தி 2022.04.15 முதல் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.05.04 பி.ப. 2.00 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், I.E.E. அறிக்கையைத் தயாரிப்பதற்கான விலைமனுக்கோரல், என்று குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

2022.05.04ம் திகதி பி.ப. 2.00 இற்கு கேள்விகள், திறக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்/ இரத்துச் செய்யும் முழுமையான உரிமை தலைவர் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**21, மீரானியா வீதி,**
**கொழும்பு-12.**

---

## பொருட் கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-48

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழு தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார். தெரிவு செய்யப்படும் விநியோகத்தர்கள், கொள்வனவு கட்டளை கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் விநியோகத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

1. ***Item*** - White Printing Paper - 17"-70gsm ± 2.5% - 200MT±10%
   விலைமனு குறிப்பு இல.:- SCP06/WPP/17/70/NCB18/2022-37
   திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 12,500.00

2. ***Item*** - White Printing Paper - 21"-70gsm ± 2.5% - 250MT±10%
   விலைமனு குறிப்பு இல.:- SCP06/WPP/21/70/NCB25/2022-38
   திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 12,500.00

3. ***Item*** - White Printing Paper - 35"-70gsm ± 2.5% - 100MT±10%
   விலைமனு குறிப்பு இல.:- SCP06/WPP/35/70/NCB19/2022-41
   திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 5,000.00

4. ***Item*** - White Printing Paper - 22.5"-60gsm ± 2.5% - 150MT±10%
   விலைமனு குறிப்பு இல.:- SCP06/WPP/22.5/60/NCB26/2022-43
   திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 10,000.00

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் 2022.04.27 ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும்.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**கொள்முதல் குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**2022.04.06**
**தொலைபேசி: 011-2694898**
**இணையதளம்: www.documents.gov.lk**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலை மனுக்கோரல் (IFB)

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கனிஷ்ட ஊழியர்களுக்கான சீருடைப் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

2. வழங்கப்பட வேண்டிய பொருட்களின் விளக்கம்

| லொட் இல. | பொருட்களின் விபரம் | நிறம்/தன்மை | அலகு | தொகை |
|---|---|---|---|---|
| Lot A | கால்சட்டை துணி (60") | கறுப்பு | மீட்டர் | 5,106.50 |
| Lot B | சட்டை துணி (45") | வெள்ளை | மீட்டர் | 5,395.75 |
| Lot C | சட்டை துணி (45") | காக்கி | மீட்டர் | 906.5 |
| Lot D | சாரம் | வெள்ளை | இலக்கம் | 16 |
| Lot E | சாரி | சில்க் | இலக்கம் | 198 |

3. மனுக்கோரல்கள் **தேசிய மனு கோரல் போட்டி** முறைக்கமைய நடைபெறும்.

4. மனுதாரர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொட் எண்ணிக்கைக்கு விண்ணப்பிக்கலாம்.

5. மனுதாரர்கள் ஒரு லொட் அளவில் 100% க்கும் குறைவான அளவிற்கு மனு எடுப்பதற்காக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6. மனுதாரர்களால் விண்ணப்பிக்கும் அனைத்து பொருட்களுக்கும் **மாதிரிகளை (SAMPLES)** வழங்க வேண்டும்.

7. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் அலுவலக நேரத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதுடன் மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்துக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர் (கொள்முதல்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, நான்காம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**

தொலைபேசி : **011 2046481, 011 2046476** மற்றும் பெக்ஸ் : **011 2884790**

8. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.04.06** ஆம் திகதியிலிருந்து **2022.04.27** ஆம் திகதி வரை காலை **09.00 மணியிலிருந்து மாலை 15.00** மணி வரையான காலப்பகுதியினுள் **பணிப்பாளர், நான்காம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் **"பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்** பெயரில் **60 நாட்கள்** வரை செல்லுபடியாகும் காலத்துடன் வங்கி வரைவோலை மற்றும் மீளச் செலுத்தப்படாத **ரூ.2,000/- (வட்வரி உள்ளடங்காத)** மனுக் கட்டணத்தினை செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

9. அனைத்து மனுக்களும் **2022.08.11** வரை செல்லுபடியாகும் மனு உறுதிப்பாதுகாப்பு ஆவணத்துடன் சமர்பித்தல் வேண்டும்.

10. **2022.04.28 ஆம் திகதி** 14.30 மணிக்கு முன்னர் மனுப் பிரதிகளுடன் தயாரிப்பு மாதிரிகளையும் **தலைவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல.216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

11. மனுக்கள் **77 நாட்கள்** வரை செல்லுபடியாகும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை
நான்காம் மாடி, 'மகநெகும மஹமெதுர',
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கமத்தொழில் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல் - காலத்தை நீடித்தல்

கமத்தொழில் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு பின்வருவனவற்றை வழங்குவதற்காக 2022-03-17ஆம் திகதிய பத்திரிகை அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| தொ. இல. | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|
| 1. | விசுறும் நீர் வழங்கல் முறைமையொன்றை நிறுவுதல், அரச விதைகள் உற்பத்திப் பண்ணை, பொலன்னறுவை | க.தி.வ./2/3/2/2022(04) | 2022-08-19 |
| 2. | விசுறும் நீர் வழங்கல் முறைமையொன்றை நிறுவுதல், அரச விதைகள் உற்பத்திப் பண்ணை, மஹஇலுப்பள்ளம | க.தி.வ./2/3/2/2022(03) | 2022-08-19 |
| 3. | விசுறும் நீர் வழங்கல் முறைமையொன்றை நிறுவுதல், அரச விதை உற்பத்திப் பண்ணை, அலுத்தரம | க.தி.வ./2/3/2/2022(02) | 2022-08-19 |

- விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் - 2022-04-19ஆம் திகதி மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை
- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் - 2022-04-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு
- விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் - 2022-04-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நிர்வாகம் 02 கிளை,**
**கமத்தொழில் திணைக்களம்,**
**பேராதனை.**
**2021-09-07.**
**081-2388331**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

01. கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கீழே குறிப்பிடப்படும் மூடப்படும் நாள் மு.ப.10.00 மணிவரை, சுகாதார அமைச்சு, பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

| | உருப்படி | விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய காலம் | | மூடப்படும் திகதி | BES அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) மில்லியனில் |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | |
| 1 | 02 Nos. Pressure Swing Absorption Oxygen Generation Plant | 2022.04.07 | 2022.05.05 | 2022.05.06 | 20,000.00 | 119 |

02. இலங்கை சந்தைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் / மொத்த பெயர் குறிப்பிடும் பிரதிநிதிகள் மாத்திரம் இப்பெறுகையில் கலந்துகொள்ளத் தகைமை பெறுவர்.
03. எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களாலும் கொள்வனவு செய்யப்படும் நகல்களுடனான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. மேலே குறிப்பிடப்படும் கால எல்லையில் மு.ப.09.00 முதல் பி.ப.3.00 இற்கு இடையில் கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
   (தொ.பே - 011-2691916, 2694479 - பெக்ஸ் இல -011-2698317)
05. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.
06. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
07. விலைமனு ஆவணங்களுடன் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் ஒப்பந்த பதிவு சான்றிதழை தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.
08. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து தொ. பே இல : 2684732 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பெறுகைக்குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10.**

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

### வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விலை மனு இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியல் மதிப்பீடு (வெட் இன்றி) (ரூ. மில்லியன்) | ICTAD நிறுவனப் பதிவு | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20-T-05-2022 | யால தேசிய பூங்காவின் குருலுகெம வாவியை மறுசீரமைத்தல் | 6.3 | C5/C6/C7 (நீர்ப்பாசனம்) | 2,500.00 | 96,000.00 2022-08-12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |
| 02 | WL/02/20/T-06-2022 | யால தேசிய பூங்காவின் அதுரு மிதுரு வாவியை மறுசீரமைத்தல் | 72.4 | C3/C4 (நீர்ப்பாசனம்) | 16,000.00 | 1,087,000.00 2022-08-12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |
| 03 | WL/02/20/T-07-2022 | நீரோட்ட நிமன தேசிய பூங்காவின் திவுலான வில்லுவில் ஜப்பான் ஜபர தாவரங்களை அப்புறப்படுத்துதல் | 2.9 | C5/C6/C7/C8/C9 (நீர்ப்பாசனம்) | 1,500.00 | 44,000.00 2022-08-12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |
| 04 | WL/02/20/B-03-2022 | பொலன்னறுவை வலயத்திலுள்ள பிம்புரன் வெவ (வெஹெரகல) இணைந்த உத்தியோகபூர்வ விடுதிகளின் திருத்தவேலைகள் | 7.5 | C7/C6/C7 (கட்டிடங்கள்) | 2,500.00 | 107,000.00 2022-08-12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |
| 05 | WL/02/20/B-04-2022 | யால தேசிய பூங்காவில் கடகமுவ நுழைவாயிலில் உள்ள மலசலகூட முறைமையை மறுசீரமைத்தல் | 4.7 | C5/C6/C7/C8 (கட்டிடங்கள்) | 2,000.00 | 71,000.00 2022-07-29ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |
| 06 | WL/02/20/B-05-2022 | கதிர்காமம் வனப் பாதுகாப்பு அலுவலகத்தின் மலசலகூட முறைமையை மறுசீரமைத்தல் | 3.6 | C5/C6/C7/C8 (கட்டிடங்கள்) | 1,500.00 | 55,000.00 2022-07-29ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
03. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை 2022-04-28ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்லை, வன சீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. யால தேசிய பூங்காவின் அதுரு மிதுரு வாவியை மறுசீரமைக்கும் ஒப்பந்தத்திற்காக இடம்பெறும் கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-04-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு யால தேசிய பூங்காவின் பலட்டுபானயில் இடம்பெறும் என்பதுடன் வாவி இடப்பரப்பை பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களும் கடந்த ஆறு மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள் மற்றும் கடந்த 05 வருடங்களினுள் நிறைவு செய்யப்பட்ட இதற்குச் சமமான 02 வேலைகளை முற்படுத்துதல் வேண்டும் என்பதுடன் 10 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு கேள்வி ஆவணங்களில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 2022-04-28ஆம் திகதி வரையில் வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எனும் பெயருக்கு எழுத்து மூலமான கோரிக்கை மற்றும் ICTAD பதிவுப் புத்தகத்தின் முதல் பக்கத்துடன் மீளளிக்கப்படாத வைப்பை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
07. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் குறித்த செயற்திட்ட வளவை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. மேற்படி கேள்விப் பிணை முறியை வங்கியின் மூலம் செலுத்துவதானால் தரப்பட்டுள்ள பெறுமதி மற்றும் தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட PCA 03 சான்றிதழ் கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2022-04-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே (2022-04-29) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
11. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத்**
**திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

## கொழும்பு மாநகர சபை

### கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.09.17ஆம் திகதிய 2245/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது

**(1952ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற தரப்படுத்தப்பட்ட துணை விதிச் சட்டம்)**

1989.01.20ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி 541/17ஆம் இலக்க துணை விதிச் சட்டத்தின் Vஆம் பாகத்தின் பிரகாரமான கேள்வி அறிவித்தல்

# விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள் / விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள் / சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்வி தாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD/13/3635/2022 | நில அளவையாளர் மற்றும் ஒரு உத்தரவுபெற்ற நில அளவையாளரின் சேவைக்கான பெறுகை | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 2,160.00 | 5,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD/13/222/2022 | கொழும்பு நகர சபை எல்லைக்குள் உள்ள மாநகர சபை வளவுகளுக்கான பாதுகாப்புச் சேவைகள் - 2022(I) • மாதம்பிட்டிய முற்றவெளி | | ரூபா 5,400.00 | 70,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| | | • பம்பி நிலையங்கள் (3 அமைவிடங்கள்) | | | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| | | • விளையாட்டு மைதானம், சனசமூக நிலையங்கள் மற்றும் பல (44 அமைவிடங்கள்) | | | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD/11/795/2021 | அலுவலகத் தேவைப்பாடுகள் மற்றும் காகிதாதிகளை வழங்குதல் | | ரூபா 5,400.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 4. | CPD/11/0844/2022 | PVC பொருட்களுக்கான பெறுகை (குழாய்கள், பொருத்தல்கள், Solvent சீமெந்து), நீர்த் தாங்கிகள் மற்றும் நீர் பம்பிகள் | | ரூபா 5,400.00 | 250,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 5. | CPD/14/3400/2022 | இன்டர்லொக் நடைபாதைக் கற்கள், இடையில் வெறுமையான (Hollow) புளொக் கற்கள், சாதாரண திண்ம புளொக் கற்கள் | | ரூபா 5,400.00 | 350,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (**www.colombo.mc.gov.lk**) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04,**
**இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,**
**கொழும்பு 06.**

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
**மாளிகாகந்த, கொழும்பு 10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-04-25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022 ஏப்ரல் 25ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2022.09.22ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.08.23ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.


ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 ஏப்ரல் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022 ஏப்ரல் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# போல் அடம்ஸ் சாதனையை முறியடித்த கேசவ் மகாராஜ்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளை கைப்பற்றியதன் மூலம் போல் அடம்ஸ் சாதனையை கேசவ் மகாராஜ் முறியடித்துள்ளார்.

தென் ஆபிரிக்கா அணி வீரரான கேசவ் மகாராஜ். பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன்மூலம் தென் ஆபிரிக்காவின் முன்னணி பந்து வீச்சாளர்களில் ஒருவரான போல் அடம்ஸ் சாதனையை மகாராஜ் முறியடித்துள்ளார். தென் ஆபிரிக்காவின் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய சுழற்பந்து வீச்சாளர்களில் 134 விக்கெட்டுகள் வீழ்த்தி 2வது இடத்தில் இருந்த போல் அடம்சை பின்னுக்கு தள்ளி 136 விக்கெட்டுகளுடன் கேசவ் மகாராஜ் 2வது இடத்தை பிடித்துள்ளார். முதல் இடத்தில் ஹக் டெய்ஃபீல்ட் 170 விக்கெட்டுகளுடன் முதல் இடத்தில் உள்ளார்.

OBSERVER SLT-MOBITEL 44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..............................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :..............................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :..............................
வாக்களித்தவர் பெயர் :..............................
முகவரி :..............................
மொபைல் இல. :..............................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 09-04-2022 இல. 02




கோலாகலமாக திறந்து வைக்கப்பட்ட

# கிழக்கின் முதல் புற்தரை மைதானம்



*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கிராம அமைப்பினால் அமைக்கப்பட்ட, புற்தரை கிரிக்கெட் மைதானம் (04) கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் கிரிக்கெட் போட்டிகளுக்காக மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் பிரேத்தியேகமாக உருவாக்கப்பட்ட இந்த புற்தரை மைதானத்தினை இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், 1996ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை இலங்கைக்கு பெற்றுத்தந்த ஜாம்பவான்களில் ஒருவருமான அர்ஜுன ரணதுங்க திறந்து வைத்திருந்தார்.

கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தின் மூலம் அமைக்கப்பட்ட இந்த மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்கு இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழ்கின்ற கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் நிதி உதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மைதானம் அமைக்கப்பட்ட விடயம் தொடர்பில், இந்த மைதான நிர்மாணப் பணிகளுக்காக பிரதானமாக நிதி உதவி வழங்கிய கோட்டைமுனை விளையாட்டுக் கழக உறுப்பினரான புவனசிங்கம் வசீகரன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார். "கிழக்கு மாகாணம் என்பதை விட மட்டக்களப்பில் இருந்து ஒரு முதற்தர கிரிக்கெட் வீரரை உருவாக்க வேண்டும் என்பது எமது நோக்கமாக இருக்கின்றது. நாம் ஒரு வீரரை உருவாக்குவதன் மூலம், அதனைத் தொடர்ந்து பல வீரர்கள் இங்கே உருவாகுவார்கள்"

மட்டக்களப்பில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் யாராவது ஒருவீரர் இலங்கையின் முதற்தர அணிகளுக்காக ஆடியிருப்பதை உங்களுக்கு காட்ட முடியாது. எங்களது பார்வையில் இங்கே பொழுதுபோக்கின் அடிப்படையிலேயே கிரிக்கெட் போட்டிகள் இருந்து வருகின்றன. எனவே, முதற்தர கிரிக்கெட் வீரர்களை உருவாக்குவதற்கு ஒரு காரணியாகவே இந்த மைதானம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த மைதானம் அமைக்கப்பட்டதால் இங்கே இருக்கும் வீரர்கள் உடனே தேசிய மட்டத்தில் ஆட ஆரம்பித்துவிடுவர் என்றும் கூறிவிட முடியாது. எனவே, வீரரை வளர்த்துவிடுவதற்கான ஒரு காரணியாகவே மைதானம் இருக்கின்றது. இந்த மைதானத்துடன் சேர்த்து எமது ஏனைய முயற்சிகளும் கைகொடுக்கும் போதே எமது திட்டம் வெற்றியடையும்" என்றார்.

இந்த மைதானத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து இலங்கை டெஸ்ட் அணியின் முதல் தலைவர் பந்துல வர்ணபுர, உபுல் சந்தன ஆகியோரின் ஆளுகையில் நடைபெற்றதோடு, மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்காக சுமார் 200 மில்லியன் வரையில் செலவிடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதேநேரம், இந்த மைதானத்தின் திறப்பு விழாவில் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி ரி 20 கிரிக்கெட் போட்டியில் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ண நாயகர்கள் அடங்கிய அணியும், பெட்டி ஹீரோஸ் அணியும் பங்கெடுத்திருந்தன.



தொடர்ந்து இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய அர்ஜுன ரணதுங்க தலைமையிலான தரப்பு 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. போட்டியின் வெற்றி இலக்கான 190 ஓட்டங்களை அடைய பதிலுக்கு ஆடிய பெட்டி ஹீரோஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து போட்டியில் தோல்வியினைத் தழுவியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த புற்தரை கிரிக்கெட் மைதானமானது மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மாத்திரமல்லாது முழுமையாக கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களுக்கும் நன்மை பயக்கும் ஒரு மைதானமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டுதல் தேவை

*அர்ஜுன ரணதுங்க*

44வது ஒப்சேர்வர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் போட்டியின் மிகவும் பிரபலமான போட்டிகள் கடந்த வாரம் தொடங்கியதால் வாக்களிப்பதில் மெதுவாக ஆனால் நிலையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில், இலங்கையின் உலகக் கிண்ணத்தை வென்ற தலைவர் அர்ஜுன ரணதுங்க, 42 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒளிரும் கிண்ணத்தை முத்தமிட்ட 42 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒப்சேர்வர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட்டர் போட்டியில் கலந்து கொண்டார்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ரணதுங்க, தனது சட்டைப் பையில் சதம் இல்லாமல் தனது சொந்த வெற்றிக்கு மாறாக பணத்தில் கவனம் செலுத்துவதன் தீமைகள் குறித்து நாட்டின் பாடசாலை கிரிக்கெட் வீரர்களை எச்சரித்தார்.



அவர் இலங்கை (LPL) மற்றும் இந்திய (IPL) உள்நாட்டு லீக்குகளை தனிமைப்படுத்தினார், இது வளரும் வீரர்களை அழிவின் பாதையில் தள்ளக்கூடும், அதே நேரத்தில் ரி 20 கிரிக்கெட் வடிவத்தில் மூன்றாவது சக்தி விளையாட்டை கைப்பற்றியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இன்று கிரிக்கெட் பணத்தின் தாக்கத்திற்கு உட்பட்டுவிட்டது, உங்கள் இலக்கு பணத்துக்காக கிரிக்கெட் விளையாடுவது மற்றும் எல்பிஎல், ஐபிஎல் அல்லது பிஎல் எதுவாக இருந்தாலும், நீங்கள் வீட்டிற்குச் சென்று நிலத்தை உழுவது நல்லது. கிரிக்கெட் என்பது ஒரு விளையாட்டு நுட்பம். நான் ரி 20 கிரிக்கெட் ரசிகன் அல்ல. இது வெறும் பொழுதுபோக்காகும்," என பிஎம்ஐசிஎச் இல் நிரம்பிய கூட்டத்தினரிடம் ரணதுங்க கூறினார்.

தான் ஓய்வுபெறும் நாள் வரை துடுப்பாட்டத்தில் விளையாடிய சிங்கள விளையாட்டுக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்த போது, தான் ஒரு தெருக்குழந்தையாகப் பார்க்க ப்பட்டதை ரணதுங்க நினைவு கூர்ந்தார்.

இதைச் சொல்வதில் நான் வருந்துகிறேன், ஆனால் இன்றைய பாடசாலை பயிற்சியாளர்கள் வீரர்களையோ அல்லது அணிகளையோ வடிவமைக்கவில்லை என்பதை அறிந்து எனக்கு நெஞ்செரிச்சல் ஏற்படுகிறது. அவர்களின் முக்கிய கவனம் அவர்களின் ஒப்பந்தங்களை ஆண்டுதோறும் நீட்டிப்பது எப்படி. உலகக் கிண்ணத்தை ஒரே நாளில் நாங்கள் வென்றதில்லை. இது பல வருட தயாரிப்பு மற்றும் கவனத்தை எடுத்தது, மேலும் நாங்கள் வெற்றி பெறுவதற்கான பாதையை உருவாக்க தங்கள் பங்கை ஆற்றிய மூத்த வீரர்கள் எங்களுக்கு முன் இருந்தனர், என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கையின் முதன்மையான ஆங்கில செய்தித்தாள் சண்டே ஒப்சர்வர், பாரம்பரியமான முதல் XI போட்டிகள் என்று அழைக்கப்படுவதைத் தவிர, ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலை களுக்கிடையேயான கிரிக்கெட் போட்டிகள் எதுவும் இல்லாத நேரத்தில், நாட்டின் பாடசாலை வீரர்களின் மூலத் திறமையை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை புரிந்துகொண்டது முன்னணி பாடசாலைகள்.

ஆனால் இந்த நிகழ்ச்சியின் அறிமுகமும், வெளியூர் பள்ளிச் சிறு கிரிக்கெட் வீரர்களுக்கென தனிப் பிரிவைக் கொண்டிருப்பதற்கான அதன் விரிவாக்கமும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள திறமையான கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிப்பதில் நீண்ட தூரம் சென்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் (SLSCA), இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் (SLC) ஆகியவற்றின் நீண்டகால சங்கத்திற்கு நன்றி, ஒப்சர்வர்மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் போட்டி பலம் பெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 6ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.